# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மே 2006 ஜீவியம் 12 மலர் 1

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| எங்கள் குடும்பம் II | 2 |
| சாவித்ரி | 32 |
| லைப் டிவைன் | 34 |
| இம்மாதச் செய்தி | 44 |
| அன்பர் கடிதம் | 45 |
| ஆலங்கட்டி மழை | 48 |
| கவிதாஞ்சலி | 58 |
| யோகவாழ்க்கை விளக்கம் V | 59 |
| அஜெண்டா | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ **யோகி பிரபஞ்சத்தின் கிரஹஸ்தன்.**

✡ **மனத்தின் சமர்ப்பணம் தியானம்.**

✡ **சம்பாதிப்பதைவிட சம்பாதித்ததை நிர்வாகம் செய்வது கடினம்.**

✡ **எழுந்த சொல் உள்ளே செல்வது சமர்ப்பணம்.**

**எழும் சொல் உள்ளே கரைவது யோகம்.**

# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

தாயார் - பள்ளியைப்போல் சாதனை; முக்கியஸ்தர்போல் முடிவு இருந்தால் வருவது தவறாது; வருவது சிறியதாக இருக்காது:

✡ எது வரும்? வருவதுஎன்றால் என்ன? ஏன் சிறியதாக இருக்காது? தண்ணீர் பள்ளத்தை நோக்கிவரும். பள்ளம் வேண்டும். பள்ளம் என்பது அடக்கம். பள்ளம் இருப்பதால்மட்டும் தண்ணீர் வாராது. மழைபெய்தால் பள்ளத்தில் தண்ணீர்வரும்.

- ❀ பள்ளம் அடக்கமானால்,
- ❀ மழை அருள்.
- ❀ அடக்கமானவர்க்கு அருள் வரும்.
- ❀ கர்மத்தை நம்புகிறவர்க்கு அருளில்லை.
- ❀ கடவுளைத்தவிர வேறெதை நம்புபவர்க்கும் அருளில்லை.
- ❀ அன்னையை நம்புகிறவர்க்கு அருள் உண்டு.
- ❀ சொந்தத் திறமையை நம்பாவிட்டால் அருள், பேரருளாகும்.
- ❀ வருவதுஎன்றால் என்ன?
- ❀ வேலை, சேவை, உழைப்பு, ஆகியவை உதவி, ஒத்தாசை பணத்தைக் கவர்ந்து இழுக்கும் - இவை உடல் உழைப்புக்கு உரியவை.

  இலட்சியம், சுறுசுறுப்பு, இனிமை, கவர்ச்சி அதிகமாக மேற்சொன்னவற்றை இழுக்கும் - அவை உணர்வுக்குரியவை.



அறிவு, இலட்சியச் சிந்தனை, திறமை (organisation) மனத்திற்கு உரியவை. இவை மேலும் பணத்தை அழைக்கும் - இவை மனத்திற்குரியவை.

பக்தி, நம்பிக்கை, நாணயம், பண்பு ஆகியவை அபரிமிதமாகப் பணத்தைத் தானே நம்மை நாடிவரச் செய்யும் - அவை ஆன்மாவுக்கு உரியவை.

குதூகலம், பிறர் கண்ணோட்டம், (மௌனம்) செயலில் மௌனம் ஆகியவை சத்தியஜீவியத்திற்குரியவை - தானே நமக்கு வேண்டியவை எல்லாம் நம்மை நாடிவரும்; வந்தபடியிருக்கும்.

❀ ஏன் சிறியதாக இருக்காது?

வாக்காளர் அரசியலில் பெறக்கூடிய மிகச்சிறிய பதவி M.L.A. அரசியலுக்கு M.L.A. பதவி சிறியதானாலும், வாக்காளருக்கு, தொகுதியை முழுவதும் அது பிரதிபலிப்பதால் அது மிகப்பெரியது.

மனிதவாழ்வு வாக்காளர்போன்றது.

அன்னைவாழ்வு அரசியல்போன்றது.

இடைவெளி ஏராளம்.

M.L.A.க்கு அடுத்தது M.P. அல்லது மந்திரிபதவிஎனலாம்.

எளியமனிதனுக்கு இவை எட்டாக்கனி.

இவை முதற்படிஎன்பதால் ஏராளம்.

அன்னை அரசியலைச் சிறியதாக்குபவர்.

பெறுவது பெரியது.

சிறியதாகப் பெறமுடியாது.

வருவது நிற்காது; வந்தபடி இருக்கும், வளர்ந்தபடியிருக்கும்.

நிற்காமல், நிரந்தரமாக வளரும்அருள் நம்மைச் சூழ்ந்துள்ளது.

இந்தக் குடும்பம் இந்திய மண்ணிலிருந்து பெற்றது என்ன?

✡ ஒவ்வொரு நாட்டிற்கும் உரிய திறமையுண்டு.

✡ இந்தியர் நாட்டிலிருந்து பெறுவது என்ன?

✡ ஒரு புத்தகம் இந்தியாவில் அச்சிடுவதற்கும், இலண்டனில் அச்சிடுவதற்கும் என்ன வித்தியாசம்? வித்தியாசம் ஏராளம். நம்மூர் புத்தகம் அட்டை வளையும், பக்கங்கள் விட்டுப்போயிருக்கும், சில பக்கங்களில் இங்க் சரியாக விழுந்திருக்காது. எல்லாப் பக்கங்களிலும் அச்சுப்பிழையிருக்கும். இதுபோன்ற எந்த குறையும் இலண்டனில் அச்சிட்ட புத்தகத்திலிருக்காது.

✡ கையால் அச்சுக்கோத்து புத்தகம் அச்சிட்டாலும், கம்ப்யூட்டரில் அச்சுக்கோத்தாலும் புத்தகம் ஒன்றே. கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி புத்தகம் அச்சிட்டால், அந்தக் கம்ப்யூட்டரிலிருப்பதால் வேறு பல காரியங்களைச் செய்யலாம்.

✡ விவசாயிஎன்பவன் விவசாயம் செய்கிறான். அவன் வெறும் விவசாயி. டிராக்டர்போன்ற நவீனச்சாதனைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்தால் அவன் வெறும் விவசாயில்லை. சீக்கிரம் அவன் பேக்டரிக்குப் போய்விடுவான்.

செய்வது விவசாயமானாலும், விஞ்ஞான முறைப்படி விவசாயம் செய்தால், அவன் விவசாயத்தை விட்டு மற்ற துறைகளில் உயர்ந்துவிடுவான்.

✡ இந்தக் குடும்பம் இந்திய மண்ணிலிருந்து ஆன்மீகம் பெறும். அன்னையிடமிருந்து ஸ்ரீ அரவிந்தம் பெறும். ஸ்ரீ அரவிந்தத்தால் கம்பனி நடத்தினால் இக்குடும்பம் கம்பனிமூலம் ஸ்ரீ அரவிந்தம் அளிக்கும் அத்தனை பேறுகளையும் பெறலாம்.

✡ பட்டேலை சர்தார்என்பார்கள். சர்தார் வல்லபாய் பட்டேல்என்பது அவர் முழுப்பெயர். 20 ஏக்கர் குடும்பம். நான்கு பிள்ளைகள். ஆண்டிற்கு 30" மழையுள்ள ஊர். நம்மூரில் 40"முதல் 60"வரை மழைபெய்கிறது. 3-ஆம் வகுப்பு முடிக்கும்பொழுது பட்டேலுக்குப் 17 வயது.



❀ "இன்று இந்தியாஎன ஒன்றிருக்கிறதுஎன்றால் அது பட்டேல் நமக்களித்தது"என ராஜன்பாபு கூறினார்.

❀ பட்டேலை இரும்புமனிதன்என்பார்கள்.

❀ சுமார் 560 சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்தார்.

❀ இவர் செய்த வேலைகளில் தோல்வி மிகக்குறைவு.

❀ மகாத்மா பிறப்பிலேயே மகான். நேரு இந்நாட்டிற்கு முடிசூடா மன்னன். கூட்டம் மகாத்மாவுக்கும், நேருவுக்கும்தான் வரும்.

❀ பட்டேல் சாதனை பெரியசாதனை. பட்டேலைச் சந்தித்த வைஸ்-ராய்கள், இங்கிலாந்தின் தலைவர்கள், அனைவரும் "தலைமைக்கு உரியவர் பட்டேல்"என்றனர்.

❀ பிறப்பிலோ, குடும்பத்திலோ, வளர்ப்பிலோ, எந்தச் சிறப்பும் இல்லாதவர்.

❀ பட்டேல் செய்த பெரியகாரியத்தை விவசாயக்குடும்பத்தில் பிறந்த நாணயமும், திறமையுமுள்ள எவரும், அவருடைய அனுபவம் இருந்தால் செய்வார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரிரு பட்டேல்கள் உள்ளனர்என்பது இந்தியநாட்டின் சிறப்பு. இது எப்படி வந்தது?

✡ இந்தியர் விவசாயம், வியாபாரம், தொழில், அரசியல், ராஜ்ய பரிபாலனம், ஆகியவை எதைச் செய்தாலும், ஆன்மீகச் சட்டப்படிச் செய்தனர், செய்கின்றனர்.

❀ வெறும் விவசாயி கூலிக்காரனாவான்.

❀ விஞ்ஞானம் படித்தவன் விவசாயம் செய்தால் அவனால் விவசாயம் விஞ்ஞான அனுபவம் பெறும்.

❀ ஆன்மீகச்சட்டப்படி விவசாயம் செய்பவனுக்கு விவசாயம் ஆன்மீக அனுபவம் தரும். பெரும்பாலோர்க்கு ஆன்மீகம் பயன்படாவிட்டால் க்ஷத்திரிய தர்மத்தை, வைசிய தர்மத்தையும் தரும் என்றால்,

✰ அவர்களால் போரை வெல்லமுடியும்.

☆ நாட்டை ஆளமுடியும்.

❀ IAS பயிற்சி பெறுபவர் தாலுக்கா ஆபீஸில் தாசில்தாராக வேலை செய்தால், அவர் தாசில்தாராகவே இருக்கமாட்டார். IAS ஆபீசராவார். IAS மனப்பான்மையுடையவர் தாசில்தாராக வேலை செய்தால் சந்தர்ப்பம் வரும்பொழுது அவர் IAS ஆபீசராகிவிடுவார்.

❀ இந்தியர் எல்லாத் துறைகளிலும் ஆன்மீக அடிப்படையில் செயல்படுவதால், நாணயம், திறமை, பண்புள்ளவர், நாட்டின் தலைமைப்பதவியை எத்துறையிலும் எட்டலாம்என்பது ஆன்மீக அனுபவம். பட்டேல் அப்படி உயர்ந்தவரே.

❀ இக்குடும்பத்தில் கணவர் சொத்தை. பிள்ளைகள் எந்தச் சிறப்பும் இல்லாதவர்கள். தாயார் இந்தியப்பண்பால் பயன்பெற்றவர். அன்னை பக்தர்.

☆ இதுவரை அவர் பெற்றது இந்தியப்பெண் பெற்றது.

☆ அன்னைக்கு பண்பும் - இந்தியப்பண்பும் - பெருந்தடை.

➤ கெட்டவன் நல்லவனாவது சரி.

➤ நல்லவன் நல்லவனாக இருப்பது அன்னைக்குத் தடை.

➤ கெட்டவன் கெட்டதை விட்டதைப்போல் நல்லவன் நல்லதைக் கைவிட வேண்டும்.

➤ நல்லதைக் கைவிட்டால் அவன் சுதந்திரமான மனிதன் ஆவான்.

➤ சுதந்திரமான மனிதன் அன்பனாகும் உரிமை பெற்றவன்.

➤ சுதந்திரம் விழிப்புப் பெறவேண்டும்.

➤ சுதந்திரம் அன்னையை ஏற்க முடியவேண்டும்.

➤ மனத்தின் உண்மை அன்னையை ஏற்க அவசியம்.

➤ உண்மை, ஏற்புத்திறன், விழிப்பு அன்பருக்குத் தேவை.

➤ நல்ல குணம் தடை, தேவையில்லை.

➤ குணமே தடைஎன்றால், நல்ல குணம் ஏன்?



➤ விழிப்பு (opening) இன்று மனிதனுக்கில்லாதது. உண்மை-யும், ஏற்கும்திறனும் அவனுக்கில்லை. இந்தியர் அவற்றைப் பெற்றால் நாடு ஜகத்குருவாகும்.

தாயார் - பெரியதை எதிர்பார்த்தால் சிறியது வரும்:

✡ எதிர்பார்ப்பு, இல்லாதபொழுது எழுகிறது. எதிர்பார்க்கும் மனம் இயலாமைக்கு உரியது.

பெரியதை எதிர்பார்ப்பது நினைவு; செயலன்று. செயலுக்கு முழுமையுண்டு. நினைவுக்குத் திறனில்லை.

வாழ்வு உடனே செயல்படக்கூடியது.

உடனே செயல்படவேண்டும்என்றால் பெரியதைத் தரமுடியாது. முடிந்தது சிறியது.

இயலாமை செயல்படாமலிருந்தால் நினைக்காது; எதிர்பார்க்காது.

இயலாமை செயல்பட்டால், முடிந்தஅளவில் செயல்படும். முடிந்தது நினைவு என்பதால் எதிர்பார்க்கிறது.

உரியதைமட்டும் பெறுவது பண்பு.

உரியதை நினைப்பவர்க்கு எதிர்பார்ப்பு இருக்காது.

தமக்குரியது இல்லாதவற்றை இயலாமையுடையவர் உடனே பெற விரும்புவது எதிர்பார்ப்பு. அதற்குரியது சிறிய பலன்.

✡ இந்தக் குடும்பத்திற்கு வந்தனவெல்லாம் எதிர்பாராதது.

எதிர்பார்க்கவில்லைஎன்பதற்குக் காரணம் அப்படி ஒரு வாய்ப்பு தங்களுக்குண்டுஎன்று தெரியாது.

பொதுவாக எதிர்பாராதது நடப்பதற்குக் காரணம், நம் மனம் குறுக்கிடமுடியாத காரணத்தால். தெரிந்ததை மனம் எதிர்பார்க்கும். அது நடக்காது.

தெரிந்து, எதிர்பாராமலிருக்க மனிதமனத்தால் முடியாது.

அது முடிந்தால் மனிதன் உயர்ந்து தெய்வமாகிறான்.

✡ எதிர்பார்ப்பு, கற்பனையிலிருந்து வேறுபட்டது.

எதிர்காலத்தில் நடக்கக்கூடியதை உருவகப்படுத்துவது கற்பனை.

தன் ஆசையைக் கற்பனைக்கோட்டையால் பூர்த்திசெய்வது எதிர்பார்ப்பு.

கணவரோ, குடும்பமோ கம்பனி வரும்என அறியவில்லை.

பவர்பிராஜெக்ட் அவர்கள் கற்பனையிலோ, சிந்தனையிலோ இல்லை.

மனத்திலில்லாதது நடக்கிறது.

சிறியவன், அண்ணன் கேலியை நிறுத்துவான்என எதிர்பார்க்கிறான்; நடக்கவில்லை.

A.G.ஆபீஸ் ஆபீஸர் கான்சர் குணமாகும்என நினைக்கவில்லை; குணமாயிற்று.

பெண், தோழிக்கு, அவள் அக்காவுக்கு நல்லது நடக்கவேண்டும்எனப் பிரியப்படுகிறாள். இருக்கும் நிலையில் மனம் எதிர்பார்க்கவில்லை; நடந்தது.

கவர்னர் பாக்டரிக்கு வருவது, பார்ட்டிக்கு அழைப்பது ஆகியவை எதிர்பார்ப்பில்லாதவை.

✡ *கணவர் அன்னையை ஏற்கவேண்டும்என்பது எதிர்பார்ப்பது. ஒப்புக்கு நடக்கிறது. உண்மையில் நடக்கவில்லை.*

எதிர்பார்ப்பதுஎன்றால் என்ன?

சாதிப்பது ஜீவன் அல்லது உடல்.

உடல் ஜடப்பொருள். சாதனை ஜட உடலுக்குரியது.

மனம் எண்ணும்; எண்ணம் சூட்சுமமானது.

உயிருக்கு சக்தியுள்ளது; உருவமில்லை, உடலில்லை.

உடல் சாதித்தால், உயிர் உதவும். தானே சாதிக்கும் திறனுடையதன்று உயிர்.



எண்ணம் நினைக்கும்; சாதிக்காது.

பெரியதாக நினைப்பது எதிர்பார்ப்பது.

பெரியதாக எதிர்பார்ப்பது ஜீவனற்றவனுடைய பெரியஆசை; பேராசை.

ஆசை தன்னை எண்ணமாகப் பூர்த்தி செய்துகொள்ளும்; உண்மையில் பூர்த்தி செய்துகொள்ளாது.

சக்தியும், உடலுமற்ற எண்ணம் செயல்படுவது எதிர்பார்ப்பது.

எதிர்காலத்தில் நடப்பதை இப்பொழுது வேண்டும்என்பது எதிர்பார்ப்பது.

ஜீவனற்றதைப் பெரியதாக்கிச் சாதிக்க நினைப்பதுடன், உடனே வேண்டும்என்பது காலத்தையும் சுருக்க நினைப்பதாகும்.

சுருங்குவது காலமன்று, பலன்.

மட்டமானவர்க்கு, கெட்டஎண்ணமுள்ளவர்க்கு உதவிசெய்தால் நம் வேலை கெடுமென கணவர் அறிவார்:

✡ கெட்டஎண்ணமுள்ளவனைக் கணவர் நல்லவன்என நினைக்கிறார். அவனுக்கு லைசென்ஸ் வாங்கித் தருகிறேன்என்றார். அவனால் 2 வருஷங்களாக முடியாததைக் கணவர் முடித்துக்கொடுக்கப் பிரியப்படுகிறார். இந்த உதவியைச் செய்ய ஏற்றுக்கொண்டபிறகு, கேள்விப்பட்ட முதல் செய்தி, கணவருக்கு முக்கியமான டிபார்ட்-மென்டின் தலைவராக இவருடைய பரமஎதிரி வந்துள்ளதாக அறிந்தார்.

✡ உலகில் ஆனந்தம்தவிர வேறில்லைஎன்றால் கெட்டஎண்ணம் எப்படி வந்தது?

அது அகந்தைக்குரியது.

அகந்தையுடன் தொடர்புகொண்டால் அதன் பலன் நமக்கும் கிடைக்கிறது.

நாம் கெட்டஎண்ணத்துடன் தொடர்புகொள்வதால், கெட்டஎண்ணம் அழிகிறது. அது சரியன்றோ?

நாம் கெட்டஎண்ணத்துடன் தொடர்புகொண்டால், கெட்டஎண்ணம் அழிவதன்முன் வளரும்.

வளர்ந்தாலும், முடிவில் அழியும்.

கெட்டஎண்ணம் அழியும்பொழுது நாமும் அழிவோம் - அதாவது நம் கெட்டஎண்ணமும் அழியும்.

அது தவறில்லை.

நாம் கெட்டஎண்ணத்துடன் ஐக்கியமாக நினைத்தால் நாம் அழிவோம்.

எப்படியும் முடிவு நல்லதாக இருக்கும்.

அது நமக்குத் தேவையா?

அன்னை, உலகில் வந்து நம்முடனெல்லாம் பழகவில்லையா, பழகிய-தற்காக அவதிப்படவில்லையா?

கெட்டஎண்ணம் அழிய நாம் செய்யும் சேவை அதுஎனக் கொள்ள-லாமா?

தத்துவம் சரி. நம்மால் அது முடியுமா? நமக்கு அது தேவையா? என்பது கேள்வி. கெட்டஎண்ணம் அழியும் வழிகள் இரண்டு:

1. தன் கெட்டகுணத்தை அறிந்து, அழிய விரும்பி, அழிய முன்-வருவது.
2. கெட்டஎண்ணம், நம் கெட்டஎண்ணத்துடன் சேர்ந்து அதை அழித்துத் தானும் அழிவது.

ஹிட்லர் உலகை அழிக்க முயன்று தான் அழிந்தான். அது இரண்டாம் வகைக்கு உதாரணம். கெட்டஎண்ணம் தன்னையறிந்து தானே அழிய கோர்பஷேவ் வரும்வரை உலகில் உதாரணமில்லை. ஹிட்லர் உலகை அழிக்க முயன்றதால் நேசநாடுகளில் உள்ள கொடுமை இரண்டாம் போரால் அழிந்தது. இரண்டாம் போருக்குப் பின், உலகம் அநியாயத்தை அழித்தது. பெரியவன் கிளப்பில் பேசாததை பேசியதாக அடியாள் கூட்டம் அறிந்து அவனை அடிக்க முயன்றனர்.

❀ அது அருளால் விலகியதை நாம் போற்றுகிறோம்.



❀ அடியாள் கூட்டம் அநியாயமாகப் பெரியவனைத் துன்புறுத்தி-யிருந்தாலும் அது பெரியவன் மனதிலுள்ள தவறான எண்ணத்தை அழித்திருக்கும்.

❀ எப்படியும் முடிவு நல்லதாக இருக்கும்.

அம்முடிவு துன்பத்தாலோ, துன்பமில்லாமலோ வரும்.

எவ்வழி முடிவு வரவேண்டும்என்பது நம் choice இஷ்டத்தைப் பொருத்தது.

நாம் பெரியவனுக்குத் தொந்தரவு வரக்கூடாதுஎன விரும்புவோம்.

அது வரக்கூடாதுஎனில் அவன் தன் மனத்தைத் தூய்மையாக்க முன்வரவேண்டும்.

பொதுவாக, மனிதர்கள் கெட்டஎண்ணத்துடன் ஐக்கியமாக இருப்பார்கள்.

அதைத் தாழ்ந்தஜீவியம் low consciousnessஎன்கிறோம்.

அதனால் அவர்களே அழிவார்கள். அதுவும் நல்ல பலன்என நம் மனம் ஏற்காது.

கெட்டதிலிருந்து விலக நம் மனம் சம்மதித்தால் தொந்தரவு விலகும்.

இது கடுமையான இடம்.

கடுமையாகத் தெரிந்தாலும், இதுவும் கடுமை அழியும் மார்க்கம்.

கடுமை இனிமையாக மாறுவது திருவுருமாற்றம். நாம் நாட வேண்டியது அதுவே.

✡ இரண்டாம் உலகயுத்தம் வருமுன் பகவான் அதைத் தவிர்க்க முயன்றார். அவர், கரியஉருவம் உலக சூட்சுமச்சரீரத்தில் எழுவதைக் கண்டார். இது தவிர்க்க முடியாததுஎன அறிந்து, அதை போர்மூலம் அழிக்க முடிவுசெய்தார். உலகப்போரை அன்னையின் போர்எனக் கூறினார். சர்ச்சில் 1920லிருந்து உலகப்போரை எவ்வளவு எளிமையாகத் தவிர்த்திருக்கலாம்என்று விளக்கமாக எழுதுகிறார்.

❀ இங்கிலாந்து பாராமுகமாக இருந்ததால் ஹிட்லர் வளர்ந்தான்என சர்ச்சில் எழுதுகிறார்.

❀ பென்டரில் மூன் என்ற I.C.S. ஆபீசர் பாகிஸ்தான் தவிர்க்கப்படக் கூடியதுஎன எழுதுகிறார். 1946 டிசம்பர்வரை பிரிவினையைத் தவிர்த்திருக்கலாம்எனக் கூறுகிறார். 1946க்குப்பின்னும் உயிர்ச்சேதத்தைத் தவிர்த்திருக்கலாம்எனக் கூறும்முன் தம் சமஸ்தானத்தில் - பவல்பூரில் - தானே அதைச் செய்ததை விளக்கி எழுதியிருக்கிறார்.

❀ பஞ்சாப் சீக்கியர்கள் உடல் வலிமைபெற்றவர்கள். உடல் மாற, அது அழியவேண்டும். தானே மாறாது. மாறக்கூடாதுஎனச் சட்டமில்லை; அது choice இஷ்டத்தைப்பொருத்தது. இரண்டாம் யுத்தம், இந்தியச்சுதந்திரம் மேற்கூறிய கருத்தை விளக்குகிறது.

❀ நம் வாழ்வில் நாம் அதைத் தெளிவாகப் பார்க்கலாம்.

❀ கடந்தது மிகத்தெளிவாக விளக்கும்.

❀ மனம் அடங்கி, உடல் வணங்கி, அடக்கம் வந்த இடங்களில் ஆபத்து விலகி, அபரிமிதமான முன்னேற்றம் வந்ததையும், மனம் அடங்காத இடத்தில், மனம் அடங்கினாலும், உடல் வணங்காத இடத்தில் வாழ்வு ஆபத்தைக் கொண்டுவந்ததையும், நஷ்டம், கஷ்டம் வந்ததையும் காணலாம்.

❀ மேலும் விளக்கம் தேவைப்பட்டால் நடப்பதைக் காணலாம். புதிய எண்ணத்தைச் செயல்படுத்திப்பார்த்து பலனை ஆராயலாம்.

❀ கதையில் நெகட்டிவான இடங்களை நான் அதிகமாக எழுதவில்லை. சிறியவனுக்குக் கேலி வருவது, பெரியவனுக்கு ஆபத்து வந்து விலகுவது, கம்பனிக்குத் தொழிலாளர்த்தலைவன் வருவது, தூரத்து உறவில் வேலை போய் வருவது போன்ற நிகழ்ச்சிகளில் இந்த அம்சத்தைத் தொட்டுப்பார்த்திருக்கிறேன். பெரியதொந்தரவுகளைக் கதையில் உருவாக்கவில்லை. ஏனெனில், எவருக்கும் கடந்தகாலம் அதை விளக்கும். எதிர்காலத்தைப்



பாஸிட்டிவாகவே விளக்க முயன்றிருக்கிறேன். வேலைக்காரியின் கணவனுக்குத் தோப்புக் குத்தகை வருவதும், தோப்பு சொந்தமாக வருவதையும் குறிப்பிட்டுள்ளேன். பார்ட்னர் கணவர்மீது அதிர்ஷ்டம் இருப்பதைக் கண்டு,

☆ அவருக்குப் பங்குகொடுக்க முன்வந்ததால்,

☆ கம்பனி வளர்வதையும்,

☆ பவர்பிராஜெக்ட் வருவதையும்,

☆ டெய்வான் பேங்க் அழைப்பதையும்,

காட்டியிருக்கிறேன். இவற்றையெல்லாம்விட அந்தஸ்து உயர்வதையும், கவர்னர் அழைப்பதையும், பெரியஇடத்துப் பழக்கம் வருவதையும், குடும்பம் பெரியதாகக் கருதி தத்தளிக்கும் நிலையில் கதையை முடித்துவிட்டேன்.

☆ எவரும் இக்கதைமூலம் தங்கள் வாழ்வில் நன்மை, தீமை கடந்த நாட்களில் செயல்பட்டதையும், இன்று நமக்கு choice இருப்பதையும், எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ளும் வாய்ப்பையும் அறியமுடியும்.

தாயார் - 1. பழையமுதலாளிக்கு உதவினார், மகசூல் 30 வருஷங்களாகப் போயிற்று;

2. பழையபேராசிரியருக்கு சமாதிபுஷ்பம் அனுப்பினார், வீடு கேஸ் வந்தது;

3. பழையதலைவருக்கு வீடு இனாம்கொடுக்க நினைத்தார், சொத்து மேல் கேஸ் வந்தது;

4. பழையநண்பனுக்குக் கைமாற்றுக் கொடுத்தார், மானம் போயிற்று:

✡ இக்கதையில் கெட்டஎண்ணம் செயல்படுவதைத் தவிர்க்கவேண்டும் என்பதை சிறிதளவே குறிப்பிட்டுவருகிறேன். வாழ்வில் நாம் சில விஷயங்களைப் பார்த்தாலும் பொருட்படுத்துவதில்லை.

❀ தகப்பனார் ரிடையராகி, P.F. பணம் ரூ.3,000/-இல் வாழ வேண்டிய நிலையில், அவர் ரிடையரானபொழுதுள்ள சம்பளத்தைப் போல் இருமடங்கு அசோக் லேலெண்டில் சம்பாதிக்கும் பையன், தகப்பனாரைப் பார்க்க வந்தான். அவர் ரிடையர்ஆனது 1960. பென்ஷனில்லை. ஒரே பையன், ஒரே பெண். செல்லப்பையன். P.F. பணத்தைக் கேட்கிறான். நான் என்ன செய்வேன்என்றார் தகப்பனார். பிச்சை எடேன் என்றான். ஏதோ பையன் ஆசைப்படுகிறான்என்று தோன்றியதேதவிர அதன்பின் உள்ள மனிதச்சுபாவம் புரிவதில்லை.

❀ பேராசிரியர் பால்யநண்பர், அரசியல்தலைவர். தலைவருக்குப் பெரிய வீடிருக்கிறது. சாப்பாட்டிற்கு வருமானமில்லை. சுதந்திரப் போராட்ட வீரர்கட்கு பென்ஷன் வாராத காலம். பேராசிரியருக்கு இரண்டு வீடுகள். மகனும், மகளும் டாக்டர்கள். பேராசிரியரின் மாணவன் வேலையை இராஜினாமா செய்துவிட்டு அன்னைச் சேவையிலிருக்கிறான். அரசியல்தலைவர் வீட்டை விலை கொடுத்து வாங்கினான். இரசீது பெற மனம் வரவில்லை. பேராசிரியரும் மாணவனும் உயிருக்கு உயிரானவர். பேராசிரியர் அன்பர். "நீ விலைகொடுத்து வாங்கிய வீட்டைத் தலைவருக்கு இனாமாகக்கொடுத்தால் எனக்கு சந்தோஷம்"என மாணவனுக்குக் கடிதம் எழுதினார். இவருக்கு 2 வீடுகள் இருக்கின்றன. இவர் ஒரு வீடு தரலாம். தலைவருக்கு வீடுண்டு. மாணவனுக்கு வீடில்லை. மாணவன் மனம் பேராசிரியர் அன்பைக் கருதியது. பொறாமை, கெட்டஎண்ணம்எனத் தோன்றவில்லை. அவர் எழுதியதை மாணவன் பொருட்படுத்தவில்லை. அவர் உடல் முழுவதும் எக்ஸிமா வந்துவிட்டது. எந்த ஸ்பெஷலிஸ்டாலும் குணப்படுத்தமுடியவில்லை. அவர் அன்னைபக்தியும் குணப்படுத்த-



வில்லை. மாணவன் ஆசிரியர்மீதுள்ள அன்பால் தினமும் சமாதிபுஷ்பம் அவருக்கு அனுப்பினான். எக்ஸிமா குணமாயிற்று. தலைவர் தாம் விலைகொடுத்து வாங்கிய வீட்டை - இரசீது கொடுக்காததால் - திருப்பிக்கொடுக்கச்சொல்லி கேஸ் போட்டார்; தோற்றார். கெட்டஎண்ணமுள்ள பேராசிரியருக்கு சமாதிபுஷ்பம் அனுப்பியதால் அவர் கெட்டஎண்ணம் நிறைவேறியது. கேஸ் போடுமுன் மாணவனுக்கு தலைவர்மீது அனுதாபம் ஏற்பட்டு அவர் கேட்பதுபோல் வீட்டைத் தருவதாக அவருக்குக் கடிதம் எழுதினான். அடுத்த நாள் அவனுக்குப் பாதி உரிமையுள்ள பெரிய சொத்தில் அவனுக்கு உரிமையில்லைஎன பங்குதாரர் கேஸ்போட்டார். மாணவனுக்கு கேஸ் வந்தபிறகு காரணம் புரிந்து past consecration மூலம் கேஸை ஜெயிக்க 2 ஆண்டுகளாகி, ஹைகோர்ட்வரை போகவேண்டியதாயிற்று.

❀ நண்பர், குரு, உறவினர், உடன்பிறந்தவர் "நீ நடுத்தெருவில் நிற்பதை நான் பார்த்துக் கைதட்டிச் சிரிக்கவேண்டும்"என்று சொன்னாலும் அது மனதைத் தொடுவதில்லை, புண்படுத்துவது இல்லை. ஏதோ சொன்னார்கள்என விட்டுவிடுகிறோம். அந்தச் சொல் பலித்தபொழுது யோசனைவருவது வழக்கம்.

✰ கெட்டஎண்ணம் இல்லாதவரில்லை.

✰ பிறர் கெட்டஎண்ணம் நம்மைப் பாதிக்கும்படி நாம் அடிக்கடி நடக்கிறோம். அது தெரிவதில்லை.

✰ அவை பொருட்டில்லை. விழித்துக்கொண்டால் தப்பிக்கலாம். நம் கெட்டஎண்ணத்தை நாம் அறியவேண்டும், அதிலிருந்து தப்புவது அதைவிடக் கடினம்.

❀ தலைவருக்கு உன் வீட்டைக் கொடுஎன்ற பேராசிரியருடைய பெரியவீட்டை அவர் அனுபவிக்கமுடியாமல், அவசியமில்லாமல், கொடுக்கவேண்டியதாயிற்று. கேஸ்போட்ட தலைவர் அடாவடியாகக் கேட்டுப் பணம்பெற்ற அடுத்த மாதம் இறந்துபோனார்.

❀ மகள் நல்லபுடவை கட்டி அழகாக இருப்பதைக்கண்டு பொறாமைப்படும் தாயாருண்டுஎன நம்மால் நம்பமுடிவதில்லை.

❀ தனக்குப் பெரிய சேவை செய்த நண்பனை மனிதன் அழிக்க முயல்வான்; "அவன் கெட்டலைந்து என்னிடம் வரவேண்டும்" என மனமாரச் சொல்வான் மனிதன் என நம்பமுடியாமல் திகைக்கும் பொழுது, பலியானவன் மீண்டும் அவனையே நாடுவதைக் காண்கிறோம்.

❀ "உன்னுடைய பிரபலமான திட்டம் கூடிவரக்கூடாதல்லவா?" என ஆசீர்வாதம் செய்யும் குருவும் உண்டு என்றால் எப்படி நம்புவது? கேட்டவருக்கே நம்பிக்கை ஏற்படவில்லையே!

❀ திருடாதவன்மீது போலீஸ் பிராது கொடுத்து, அவனை நையப் புடைத்தபின், அடிவாங்கியவன் முதலாளியிடம் வந்து 'நீங்களே என் தகப்பனார்'என்பது உலகவழக்கம்.

❀ மனிதனுக்கு சத்தியம், நேர்மை தேவையில்லை. பொல்லாதவரானாலும் குரு, பெற்றோர், கணவன், மனைவி, மக்கள் தேவை என்பது நடைமுறை உண்மை.

இவை அஞ்ஞானருசி Taste of Ignorance.

❀ துரோகம் செய்து பலியானபின் விடமுடியாத உறவை துரோகம் செய்வதன்முன் அறிவால் புரிந்து, உணர்வால் களைந்து, விலகி, அன்னைமூலம் வரும் உறவும், நட்புமே உறவுஎனக்கொள்ள முடியுமா?

அன்பராகும் தகுதிக்கு அது தேவை.

❀ உறவை, நட்பைக் களைதலைவிட அவர்களை மனதால் நாடும் மனப்பான்மையைக் களைந்தால், அவர்கள் தாமே விலகுவதைக் காணலாம்.

நாமே மீண்டும் அவர்களை நாடுவோம்.



❀ நெகிழ்ந்த உறவில் நிலையான துரோகத்தைக் காண்பது கயமை. அதன்படி நடப்பது தீமை. நாம் அப்படி துரோகத்தை நம்முள்ளே காணவேண்டுமேதவிர பிறருள் காண முயலக்கூடாது.

❀ நம்முள் உள்ள துரோகம் களையப்பட்டால், துரோகம் நம்மை விட்டு விலகும்.

❀ அதைத் திருவுருமாற்றம்என்கிறோம்.

❀ புறத்தில் செய்ய புனர்ஜென்மமெடுக்கவேண்டும்.

❀ அகத்தில் சாதிக்க அடுத்தவர் துணைவேண்டாம்.

❀ அகத்தில் சாதிப்பது புனர்ஜென்மம்.

❀ அப்படிச் சாதித்தால், அன்று நம் வயது 38ஆனால், 72ஆனால், அந்தச் சாதனை 38ஐ 76ஆக்கும், 72ஐ 144ஆக்கும். சாதனையால் ஆயுள் இருமடங்காகும்.

கணவர் - அன்னைபக்தன்என்பதால் எல்லாப் பிரார்த்தனைகளும் பலிக்க வேண்டுமன்றோ?

தாயார் - பிரார்த்தனையின் உண்மை பலிக்கும். பர்சனாலிட்டிக்கு ஏற்றவாறு பிரார்த்தனை பலிக்கும்;

கணவர் - அன்னை பலிக்கும்என்பது பொய்யா? நான் ஏமாந்து விட்டேனா?

✡ எல்லா உண்மையான பிரார்த்தனைகளும் பலிக்கும்என அன்னை கூறியிருக்கிறார்.

✡ உண்மையான பிரார்த்தனைஎன்றால் என்ன?

✡ நமக்குரியதுஎன ஒன்றுண்டு. நம் தகுதிக்குரியதுஎன ஒன்றுண்டு. இவையிரண்டும் உண்மையானவை. நம் ஆசைக்குரியதுஎன்பது உண்மையில்லை. நம் கற்பனைக்குரியது கணக்கில் சேராது. நான்

பட்டம்பெற்றவன். என் நண்பர்கள், என்னைப்போன்றவர்கள் சர்க்காரிலும், பாங்கிலும் கிளார்க்காக இருக்கும்பொழுது நான் பிரைவேட் கம்பனியில் வேலைசெய்கிறேன்என்றால், நான் அன்னையிடம் வந்தால் எனக்கும், என் நண்பர்கள்போல் வேலை நான் பிரார்த்திக்காமல் கிடைக்கும். பிரார்த்தித்தால் நிச்சயமாகக் கிடைக்கும். இவை உண்மையான பிரார்த்தனைகள். நான் IAS ஆபீசராக வேண்டும்என்பது ஆசைக்குரியது, உண்மையில்லை. கவர்னராக வேண்டும்என்பது கற்பனைக்கோட்டை. உரியநேரம் என்றால் என்ன?

என்னைப்போன்றவர் சர்க்காரில் குமாஸ்தாவாகும்பொழுது நான் பிரைவேட் கம்பனியில் வேலைசெய்கிறேன்எனில், இருவரும் பட்டம் பெற்றது ஒன்றானாலும், அவன் பட்டம் I கிளாசாகவும், என் பட்டம் III கிளாசாகவுமிருக்கும். III கிளாஸ் வாங்கிய மற்றொருவன் பாங்கில் வேலைசெய்கிறான்எனில் அவனுக்குள்ள பொறுமை எனக்கிருக்காது. ஒரே படிப்புள்ள பலர் வெவ்வேறு உயர்ந்த உத்தியோகத்திலிருப்பதை அவருள் ஒருவர் கருதினால்,

- ❀ இவருக்கில்லாத தகுதி அவர்கட்கு இருக்கும்.
- ❀ அது செல்வம், செல்வாக்கு, திறமை, குணம், பழக்கம், ஆகிய எதுவாகவுமிருக்கும்.
- ❀ நமக்கில்லாத பொறுமை அன்னையிடம் வந்தபின் 2 ஆண்டுகளில் அல்லது 2 மாதங்களில் வந்தால், பொறுமைசாலிக்குக் கிடைத்த பதவி நமக்குக் கிடைப்பது உரிய காலம்.
- ❀ நம் குடும்பத்திலில்லாத உயர்வு பிறர் குடும்பத்திலிருப்பதைப்போல் பிறர் குடும்பத்திலில்லாத குறை நம் குடும்பத்திலிருக்கும்.
- ❀ பர்சனாலிட்டிக்கு ஏற்றவாறு பலிக்கும்என்பது அந்தஸ்து, திறமை, குணம் ஆகியவற்றைக் குறிக்கும்.
- ❀ அன்னை பலிக்கும்என்பது பொய்யன்று; எந்தப் பிரார்த்தனையும் பலிக்கும்எனப் புரிந்துகொள்வது பொய்.



- ❀ பொய்என இருந்தால் அது அன்னையிடமில்லை. நம்மிடம் இருக்கும்.
- ❀ ஏமாற்றுவது என்பது அன்னையிடமில்லை.
- ❀ நாம் நினைக்காதனஎல்லாம் பலிக்கும்பொழுது ஏமாற்றுவது எது?
- ❀ நாமே நம்மை ஏமாற்றிக்கொள்வதுண்டு. அன்னை நம்மை ஏமாற்றுவதில்லை.

கணவர் - விஷயம் மனத்தைப்பொருத்ததா?

தாயார் - மனத்தின் பக்குவத்தைப்பொருத்தது;

கணவர் - பக்குவத்திற்கு அளவில்லை;

தாயார் - பணத்திற்கும் அளவில்லை:

✡ நாம் கடவுள் என்பதை பிரம்மா, சிவன், விஷ்ணு என்கிறோம். கடவுள் என்பது ஒரு கருத்து (concept). நம்மைப்போல் கடவுள் இருக்கிறார். அவர் தமிழ் பேசுகிறார். அவருக்கு மனைவியுண்டு; குழந்தைகளுண்டு; ஆசை, அபிலாஷைகளுண்டு; கோபதாபங்கள் உண்டு என்பது மனிதமனம் வளரும் பொழுது அதில் ஒரு கட்டம் (anthropomorphism) எனப் பெயர். எல்லா நாடுகளிலும் இதுவே மதம் வளர்ந்த வரலாறு. மனம் மேலும் வளர்ந்தபின் இதைச் சிறுபிள்ளைத்-தனம் என உணர்ந்தனர். ரூபம் உடையவன் இறைவன் என்ற மனநிலை மாறி இறைவன் ரூபமற்றவன், அரூபி என மனம் உணர்ந்தபின், இறைவன் ஆனந்தமயமானவன், சத்திமயமானவன், சத்தானவன் என அவனுக்குக் குணங்களைக் கற்பிக்கிறோம். அதைக்கடந்த நிலை அரூபிணி. சச்சிதானந்தம் என்பதே இறைவனுக்குக் குணத்தைக் கற்பிப்பது. எல்லாக் குணங்களையும் உடையவன் சகுணி எனவும், எந்தக் குணமும் இல்லாதவன் நிர்குணி எனவும் கூறுகிறோம்.

இறைவன் ரூபங்களைக் கடந்தவன் - அரூபிணி

குணங்களைக் கடந்தவன் - நிர்குணி

எனக் கருதும் தத்துவம் மனித மனத்தைக் கடக்க முயலும் நிலை. அதனால் அவனை முடிவற்றவன், அந்தம் - முடிவு - இல்லாதவன் அனந்தன் என்றார்கள். அனந்தன் என்ற கருத்து அனந்தம் எனப்படும். ரூபத்தையும், குணத்தையும் கடந்ததைப்போல் இறைவன் காலத்தையும், இடத்தையும் கடந்தவன் என்பதை அனந்தன் (Infinity, Eternity) என்றோம்.

❀ காலத்தையும், இடத்தையும், ரூபத்தையும், குணத்தையும் கடந்த நிலை அனந்தம்; அதுவே ஜீவனானால் அனந்தன். அனந்தன் என்பது ஆண்பால், பெண்பால் அதற்கில்லை. அந்த ஜீவனை சத்புருஷன் என்றோம். அந்நிலையை சத் என்றோம். பகவான் அதை Self-Conscious Being என்றார். அந்நிலையை Existence எனவும், அந்த ஜீவனை Existent எனவும் கூறுகிறார். அவனுடைய சக்தியே சமுத்திரம்.

❀ இவ்வளவும் மனம் அறிந்தது, கற்பித்தது, கற்பனை, மாயை. மனத்தைக் கடந்த நிலையைச் சொல்லால் வர்ணிக்க முடியாது. அனுபவிக்கலாம். அத்திறன் மனத்திற்கில்லை. சத்திய ஜீவியத்திற்கு உண்டு.

❀ சத்புருஷனுக்கு 5 வெளிப்பாடுகள் உள்ளன என்றோம். அவை:

1. பிரம்மம், புருஷா, ஈஸ்வரா.
2. சத், சித், ஆனந்தம்.
3. காலம், இடம்.
4. சத்தியஜீவியம்.
5. ஆன்மா என்ற அகம்; சத்தியம் என்ற புறம்.

இவை மனம் அறிந்தவை, மனம் கற்பித்தவை. சிவன், விஷ்ணு, பிரம்மா என்பவை சிறுபிள்ளைத்தனமானவை. அவற்றைக் கடந்த



கருத்துகள் இவை. வேதரிஷிகள் கடவுள்களை - இந்திரன், அக்னி, லக்ஷ்மி, நாரதர், சிவன் போன்ற கடவுள்களை - கற்பித்து அவர்கள்மூலம் சச்சிதானந்தத்தை எட்டினர். உபநிஷதம் அதைக் கடந்த மனநிலை. நேரடியாக சச்சிதானந்தத்தை எட்டினர். அதையும் கடந்தனர். கடந்தனர்எனில் கடந்ததைக் கற்பனை செய்தனர். அப்படிப்பட்ட கருத்தே அக்ஷரப்பிரம்மம்.

கீதை, "வேதத்தைப் படித்தோ, உபநிஷதத்தைப் படித்தோ புருஷோத்தமனை அடைய முடியாது" என்கிறது. புருஷோத்தமன், அக்ஷரப்பிரம்மத்தைக் கடந்தது. புருஷனைவிட உயர்ந்த நிலை புருஷோத்தமன். பிரம்மத்தைவிட உயர்ந்தது பரப்பிரம்மம்; ஈஸ்வரனைவிட உயர்ந்தது பரமேஸ்வரன். இவை மூன்றும் சேர்ந்தது சத்புருஷன். ஜீவன், புருஷன் என்பதைக் கடந்த நிலை சத் என்பது Existence. பிரம்மம் அதையும் கடந்த நிலை, அனந்தன் என்றதைக் கடந்த அனந்தம்; அனந்தம் என்பதும் குணம். அதையும் ஆண்டவனுக்குக் கற்பிக்க முடியாது என்பதால் அவ்வனந்தம் சுயமானது Self-existent Infinity என்றார் பகவான்.

☆ Infinite, finite என்பவை முரண்பாடு என்பதால் மனம் அறிவது.

☆ அவற்றைக் கடந்த Infinity என்பதை மனம் கற்பனை செய்ய முடியாது என்பதால் மனம் தன்னை இழக்கிறது. அதுவே சமாதி நிலை. மனம் தன்னைக் கடக்க முயன்றால் தன்னை இழக்கும்; Unconscious ஆகும். சமாதி நிலை என்பது மரபில் உயர்ந்த உன்னதம் பெற்றது. பகவான் அதைக் கடந்து போய் consciousஆக இருப்பது சத்தியஜீவியநிலை என்கிறார். அங்கு முரண்பாடில்லை. முரண்பாடற்ற அனந்தம் சத்தியஜீவியம். அது விழிப்பான நிலை. அதை முதலில் அனுபவித்தவர் பகவான்.

➤ அலிப்பூரில் அவர் கண்ட நாராயண தரிசனம் சத்திய ஜீவியம்.

➤ கிருஷ்ணன் அர்ஜுனனுக்குக் கொடுத்த விஸ்வரூபம் இருபுறமும் உள்ளது. அது overmind கண்டது.

✡ இந்த யோகத்தின் தத்துவம் இறைவன் சுயமான, முழுமையான அனந்தம். அதை விழிப்பில் காண்பது சத்தியஜீவியம். அதைக் காணும் மனம் சத்தியஜீவியமாகும். அதைக் காணும் வாழ்வு அனந்தமாகும். வாழ்வில் அனந்தம் என்பது அபரிமிதம்; தோல்வியற்ற நிலை. நாம் அந்த அபரிமிதத்தை அதிர்ஷ்டம் என்கிறோம். அதை உடலில் கண்டால் நாம் சத்தியஜீவனாகிறோம். அது யோகநிலை. வாழ்வில் அந்நிலை,

- ❀ நாம் தொடுவனவெல்லாம் அபரிமிதமாகப் பெருகும்.
- ❀ புத்தகம் விற்றால் ஆயிரக்கணக்காகத் தொடர்ந்து விற்கும்.
- ❀ ஏராளமான புத்தகத்தைத் தொடர்ந்து விற்பவர் சத்தியஜீவியத்தை உடலில், வாழ்வில், செயலாக, பலனாகக் காண்கிறார்.
- ❀ இது பலிக்க 'அன்னை' என்ற நூலில் கூறிய 30 குறைகளின் சாயலும் இருக்கக்கூடாது.

  உடல் சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டும்.

  வாழ்வு தோல்வியற்ற இனிமையாக இருக்கவேண்டும். மனம் 'The Life Divine'ஐ கதைப்புத்தகம்போல் படிக்கவேண்டும். பிறர் வாழ மனம் பூரிக்கவேண்டும்.

✡ இவற்றிற்கெல்லாம் தத்துவத்தில் அடிப்படை அனந்தம் Infinity.

- ❀ Infinity அனந்தம் என்பதை மனத்தால் தத்துவமாகவும், வாழ்வில் கருணை நிறைந்த இனிமையாகவும், உடலில் அபரிமிதமாகவும் காணமுடியும்.
- ❀ செய்வதை அபரிமிதமாகப் பலிக்கும்படிச் செய்தால் நாம் அந்நிலையை எட்ட முயல்கிறோம்.
- ❀ சத் என்பது ஆன்மா என்ற அகமாகவும், சத்தியம் என்ற புறமாகவுமிருப்பதால் முழுமையான சத்தியம், உண்மையைப்



பின்பற்றினால் புறத்தகுதி பெறுகிறோம். அதை உள்ளே காண்பது ஆன்மா. ஆன்மாவும், சத்தியமும் உள்ளே இணைவது சத்புருஷன். புருஷன் என்ற கருத்தைக் கடப்பது சத்தாவதாகும். அதையும் கடப்பது பிரம்மம். பிரம்மத்தின் வெளிப்பாடு

சத்திய ஜீவியம்.

✡ நாம் செய்யும் காரியம் அபரிமிதமாகப் பலிப்பது சத்தியஜீவிய மனநிலை.

✡ தாயாருக்கு இந்த தத்துவம் எல்லாம் தெரியாது. அவர் தத்துவம் படித்ததில்லை. அத்தத்துவங்கள் அன்னைச் சட்டங்களாக வாழ்வில் வெளிப்படுவதைப் படித்திருக்கிறார். அது தத்துவம் தெரியாத நடைமுறை. ஆதாயம் தேடும் குடும்ப மனநிலை. தத்துவமான நடைமுறை என்பது ஆதாயம் தேடாத higher consciousness உயர்ந்த மனநிலை. தாயாருக்கு அது தெரியாது. அவர் மனம் குடும்பத்திலிருப்பதால், குடும்பத்தின் மனம் ஆதாயத்திலிருக்கிறது.

- ❀ 5000 ரூபாய்முதல் 10,000 ரூபாய்வரை சம்பாதித்த குடும்பம் அளவுகோலில் 3, 4, 5 என்றிருந்தது.
- ❀ தகப்பனாருக்கும், பெரியவனுக்குமாகச் சேர்ந்து 25 ஆயிரம், 30 ஆயிரம் என வருமானம் பெறும் நிலை 15ஆம் நிலை.
- ❀ கம்பனி, பவர் பிராஜெக்ட், 150 கோடி கமிஷனில் பங்கு என்பது 80ஆம் நிலையைத் தொடுவது.
- ❀ இந்நிலையில் முழுக்குடும்பமும் தாயார் மனநிலையைப் பெற்றால் 80ஆம் நிலை வந்தது நிலைக்கும். அல்லது தாயார் தத்துவமான நடைமுறையை அடையவேண்டும்.
  - ✰ குடும்பம் உயர்ந்தால் தாயார் மனநிலை உயரும்.
  - ✰ தாயார் மனநிலை உயர்ந்தால் குடும்பம் உயரும்.
  - ✰ ஒன்று நடந்தால் அடுத்தது நடக்கும்.
  - ✰ இரண்டும் நடப்பது உசிதம்.

☆ இந்த அபரிமிதம் கறுப்புப்பணமாக வருவது நெகட்டிவ்.

☆ பாஸிட்டிவாக வருவது செல்வம், செல்வாக்கு, பதவி, அந்தஸ்து, பிரபலம். அவை நாடெங்கும் பரவும்; நாட்டின் எல்லையைக் கடந்து பரவும்.

❀ நாமுள்ள இடம் முழுவதும், நாடு முழுவதும், நாட்டைக் கடந்தும் அன்னை நம்மால் பரவுவது, நம் பிரபலம் பரவுவதாகும்.

❀ பெரியவன் செய்யும் கேலி;

❀ பெண் "ஆதாயமில்லாவிட்டால் அன்னை எதற்கு" என்பது;

❀ கணவர் வயிற்றுவலி குமாஸ்தா வதைவதை அனுபவிப்பது ஆகியவை

தடை. அதுபோன்ற தடைகள் ஆயிரம்.

❀ 'ரங்கன் மந்திரியாவான்' என்றால் நான் என் வாயால் அந்தப் பாவத்தைச் செய்யமாட்டேன் என்பது;

❀ பார்ட்டிக்குப் புதுடிரஸ் வேண்டும் என்பவை

சிறு காரியங்களானாலும்,

❀ பெரியதைத் தடுக்கும் சிறியவை அவை.

❀ அவை மனத்தைவிட்டே அகல்வது அன்னைபக்தி, தூயமனம்.

அளவுகடந்த சுத்தம்,

(எந்தப் புத்தகத்தின் மீதும் தூசியில்லாமலிருப்பது, எந்த அலமாரியடியிலும் குப்பையில்லாமலிருப்பது போன்ற நிலை என்றுமிருப்பது) அவசியம்.

☆ இந்த அவசியத்தின் தத்துவத்தையும், நடைமுறையையும் உணர்வது பக்தி.

அளவுகடந்து சத்தமில்லாமலிருப்பது,

☆ பூரண மௌனம்.

பெரிய ஒழுங்கு,



☆ எந்த டிராயர், பெட்டியிலும் எல்லாம், எப்பொழுதும் அடுக்கி வைக்கப்பட்டிருப்பது.

சுத்தமான கணக்கு,

☆ கடைசி பைஸாவரைக் கணக்கெழுதுவது.

உஷாரான பார்வை,

☆ எது எதனுடன் தொடர்புகொண்டுள்ளது என்ற கவனம்.

தூய்மையான மனம்,

☆ பிறர் கண்ணோட்டத்தில்மட்டும் விஷயங்களை அறிதல்.

☆ அடுத்தவர் அதிர்ஷ்டம்பெற மனம் ஏங்குதல்.

காலத்தைச் சுருக்குவது,

☆ காரியங்களைத் திறமையாகச் செய்வது.

இடம் விரயமாவதைத் தடுப்பது,

☆ உள்ள இடத்தை நன்றாகப் பயன்படுத்துவது.

தோல்வியற்ற நிலை,

☆ எதையும் வெற்றிகரமாகச் செய்வது.

சக்தியைப் பயன்படுத்துவது,

☆ முயன்று செய்வதை மூலத்தால் செய்வது.

எந்த நேரமும் சந்தோஷமாக இருப்பது,

☆ ஆனந்தத்தை (bliss) வெளியிடுவது (delight).

நெகட்டிவானவற்றைப் பாஸிட்டிவாகச் செய்வது,

☆ மனத்தைக்கடந்து சத்தியஜீவியத்தை அடைவது.

பிரச்சினைகளை வாய்ப்பாக்குவது,

☆ அதிர்ஷ்டத்தை அருளாக்குவது.

அருளைப் பேரருளாக்குவது,

☆ கடுமை இனிமையாகி, இனிமை கருணையாகி, கருணை அருள் பேரருளாவது, ஜீவியம் திருவுருமாறி உயர்வதாகும்.

கணவர் - ......... சிறு விஷயங்களில் தங்களைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் சமர்ப்பணத்தை இழக்கின்றனர். கட்டுப்பாடு சிறியதானாலும் கடைசியில் பார்க்கும்பொழுது கடவுளுக்குச் சமமாகும்.

✡ கணவருக்கு எந்தக் கட்டுப்பாடும் ஒத்துவாராது. மனைவி சொல்வதை ஏற்பது அவருக்கு மனைவிக்குக் கட்டுப்படுவதாகத் தெரிகிறது. அதனால் ஆழ்ந்து உணர்ந்து கட்டுப்பாட்டைக் கடவுளாகக் காண்கிறார்.

✡ கட்டுப்பாடு என்றால் என்ன?

- ❀ பசி, தாகம் கட்டுப்படுவது சிரமம்.
- ❀ ஆத்திரத்தைக் கட்டுப்படுத்த முடியாது.
- ❀ ஒன்று உடலுக்குரியது; ஆத்திரம் உணர்ச்சிக்குரியது.
- ❀ கட்டுப்பாடுஎனக் கணவர் இங்குக் கூறுவது சுயக்கட்டுப்பாடு. புறக்கட்டுப்பாடு சிரமமானாலும் நாம் அதற்கு எளிதில் கட்டுப்படுகிறோம். நாமாக கட்டுப்படுவது, நம்மை நாமே கட்டுப்படுத்திக்கொள்வது (Self-discipline) என்பதே கடவுள் போன்ற கட்டுப்பாடாகும்.
- ❀ சிறு விஷயங்களிலும் தமக்குக் கொஞ்சம்கூட கட்டுப்பாடில்லை என்பதைப் பூரணமாக உணர்ந்து கணவர் பேசுகிறார்.
- ❀ நாம் கட்டுப்படாத சிறுவிஷயங்களில் பூரணமாகச் சுயக்கட்டுப்பாட்டை ஏற்க முன்வந்தால் அன்னையை நோக்கி ஓர் அடி எடுத்து வைப்போம்.
- ❀ அப்படி, கணவர் குறிப்பிடுபவை: வேலைக்காரியிடம் சண்டை போடுவது, குறுக்கே பேசுவது, பேரம் பேசுவது, வயிறு நிறைந்த பின் வாய்க்காகச் சாப்பிடுவது போன்றவை.
- ❀ Token actஎன அடிக்கடி நான் எழுதுவதுண்டு. அவை நாம் அன்றாடம் செய்யும் காரியங்கள். அதை அகத்தில் செய்யலாம். இந்த தத்துவம் செயல்படும் இடம் இது.



✡ Token act - அகத்திற்குரிய அடையாளச் செயல்.

- ❀ Impulses உள்ளிருந்து எழும் வேகத்தைக் கட்டுப்படுத்துவதாக இது அமையும்.
- ❀ *இதில் முக்கியமான இடம், வெளியில் நடக்கும் நிகழ்ச்சி நம் அகக்கட்டுப்பாட்டால் மாறுவது. Life Response என நாம் அறிவோம்.*
- ❀ பெரும்பாலும் Silent will செயல்படும்.
- ❀ அலமாரி வாங்கப்போகிறோம். நாம் பார்த்ததை அடுத்த வீட்டுக்காரர் 3900 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார். அவர் ஏமாந்தவர். இது 3500 ரூபாய்க்குமேல் பெறாது. கடைக்காரர் 4700 ரூபாய் என்கிறார். இப்பொழுது மனம் துடிக்கிறது, "இதே கடையில் 3900 ரூபாய்க்கு அடுத்த வீட்டார் வாங்கி இருக்கிறார்" என்று சொல்ல, அதை சொல்லாமலிருப்பது Silent will. சமர்ப்பணம் செய்வது கட்டுப்பாட்டைவிட உயர்ந்தது.
  - ✰ இப்பொழுது எதுவும் முடியவில்லை. பேச ஆசையாக இருக்கிறது.
  - ✰ நாமே கட்டுப்படுத்துவது, வேகம் தானே கட்டுப்படுவது, மௌனம் ஏற்பட்டு கட்டுப்பாடு தேவைப்படாதது, சமர்ப்பணம் ஆகியவை நம்முன் உள்ளன.
  - ✰ நாமே கட்டுப்படுத்தினால் 4000 ரூபாய் என்கிறார்; தானே கட்டுப்படும்பொழுது 3900 ரூபாய் என்று பேச்சு வருகிறது; சமர்ப்பணத்தை நினைத்துப் பலிக்கும்பொழுது முதலாளி வந்து ரூ.3500/-க்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்கிறார்.
  - ✰ இத்தனையும் பார்த்தபிறகும் அடுத்த முறை நமக்குப் பேசத் தோன்றுகிறது. எந்த எந்த விதமாக இப்படிப்பட்டவருக்குப் பதில் சொல்லலாம்என மனம் சிந்தனையிலீடுபடுகிறது.
  - ✰ அவற்றையெல்லாம் அறிந்தவருக்குக் கட்டுப்பாடு கடவுளாகத் தோன்றும்.

"என்னால் முடியாது. என்னால் எப்படி முடியும்? என்னை உங்களிடம் ஒப்படைத்தேன். நான் செய்யவேண்டியதை, எனக்காக, என் சார்பாக நீங்கள் செய்யவேண்டும்" — Agenda, Volume 5, P.101–102.

- ✡ பிறவியிலேயே அன்னை இறைவனின் தொடர்புடன் பிறந்தவர்.
- ✡ அந்தத் தொடர்பில்லாமல் உலகில் எதுவும் அசையாது என்பது ஞானம்.
- ✡ அந்த ஞானம் செயல்பட அதற்குத் தடையானது விலகவேண்டும்.
- ✡ நாமே இதுநாள்வரை செயல்பட்ட பழக்கம் இருக்கிறது. அதுவும் இறைவனின் அருளால் நடந்தது, நம்மால் நடந்ததில்லை என்று நாம் அறிவதில்லை.
- ✡ நாம் என்பது அணு. இறைவன் அனந்தம்.
- ✡ அணுவை உற்பத்தி செய்தது அனந்தம்.
- ✡ அணுவை இயங்கவைப்பது அனந்தம்.
- ✡ அணு தானே இயங்குவதாக நினைத்துப் பழகிவிட்டது.
- ✡ பழக்கம் அணுவை அகந்தையாக்கியது.
- ✡ அகந்தை அணுவாகி, அணு அனந்தமாக, ''என்னால் முடியாது, என்னால் எப்படி முடியும்?" என்ற தெளிவு தேவை.
- ✡ என்னால் முடியாதுஎன அறிந்த எவராலும் எதுவும் முடியும்.
- ✡ அன்னை தாம் செய்வது, எவருக்கும் கொடுக்க முடியும்.
- ✡ அவரால் முடிந்தால், அவரை நம்புபவர் எவராலும் முடியும்.
- ✡ அன்னையின் உயிரும், உடலும், பிரபஞ்சத்தின் உயிரும் உடலும் ஆகும்.
- ✡ என்னால் முடியாது என்றறிந்த எவரும் அன்னையை அழைத்தால், அவருடல் அன்னையுடலுடன் தொடர்புகொள்ளும் - அதை நாம் அன்னைமீதுள்ள நம்பிக்கை என்கிறோம்.



- ✡ அன்னையின் உடல் "என்னால் முடியாது. எப்படி என்னால் முடியும். என்னை நான் உங்களிடம் ஒப்படைக்கிறேன். என் வேலையை எனக்காக நீங்கள் செய்யுங்கள்''என இறைவனிடம் கூறியபடி இருக்கிறது.
- ✡ அதைக் கூறும் எவரும் அன்னையுடன் தொடர்புகொள்கிறார்கள் - *உடனே சூழல் மாறுகிறது.*
- ✡ சூழல் மாறினால் அவர்கள் சொல்லியது உண்மை.
- ✡ ''எனக்காக நீங்கள் செய்யுங்கள்'' என்பதை எவரும் எளிதாகக் கூறலாம்.
- ✡ அது பலிக்க அதற்குமுன் சொல்லவேண்டியது, "என்னால் முடியாது, எப்படி என்னால் முடியும்'' என்பது. அதைச் சொல்ல எவரும் முன்வருவதில்லை.
- ✡ அதைச் சொல்லியவுடன், சொல்பவர் சூழல் உலகின் சூழலாகும்.
- ✡ குறைந்தபட்சம் அவருடைய உலகின் சூழலாகும்.
- ✡ அதிலிருந்து அவர் செய்வனவெல்லாம் பலிக்கும்; தொடர்ந்து பலிக்கும்.
- ✡ இரகஸ்யம் "என்னால் முடியாது" என்பதை அறிவது.
- ✡ அதை பக்தி, நம்பிக்கை எனலாம். அடக்கம் என்பது பொருத்தம்.
- ✡ உணர்ந்தவர்க்கு உலகம் உண்டு; உலகத்தில் எல்லாம் உண்டு.
- ✡ உலகம் உள்ளங்கையில் வருவது இந்தச் சொல்லால்.
- ✡ இது சொல்லானால் பயன்தாராது; உணர்வானால் உயிர்வரும்.
- ✡ உடலே எழுந்து உயிர்பெற்றுப் பேசினால், உடனே பலிக்கும்.
- ✡ மேற்சொன்ன கருத்து கருவானது. அது அன்னையின் சமர்ப்பணம்.
- ✡ கதையில் பார்ட்னர் குடும்பத்திற்கு கம்பனியைக் கொடுத்துவிட்டார்.
- ✡ உடனே கம்பனியை நடத்த முயல்கின்றனர். 'இந்தக் கம்பனியை என்னால் நடத்த முடியாது' என்ற எண்ணம் அவர்களுள் எவருக்கும்

உதயமாகவில்லை. அது வந்தால் தானே அன்னையிடம் விடும் விஷயம் எழும். அது எவருக்கும் தோன்றுவதில்லை.

- ✡ கம்பனிஎன வந்தவுடன், என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம்எனத் தோன்றுகிறதேயொழிய, என்னால் முடியாதுஎனத் தோன்றுவது இல்லை.
- ✡ நாம் கம்பனியை அன்னை நடத்துவதுபோல் நடத்த முடியாது. நாம் நடத்துவதுபோல் நடத்தலாம்; அதுவே நம் கையிலில்லை.
- ✡ வீட்டில் 'என்னால் முடியாது', 'என்னால் முடியும்' என்பவை பிரச்சினைகளில்லை. என்ன கிடைக்கும், எப்பொழுது கிடைக்கும் என்பது பேச்சு. அதை எதிர்பார்ப்பவருக்கு எதுவும் கிடைக்காது. தாம் நடத்துவதுபோலும் நடத்த முடியாத பிரச்சினைகள் வரும். அப்பொழுது அன்னை நினைவுவரும். அது சாதாரண மனித வாழ்வுக்கும் தாழ்ந்தது.
- ✡ 'எனக்குத் தெரியும்; நான் செய்வேன்' என்றால் இதுவரைக்கும் என்ன செய்திருக்கிறாய் என்பது கேள்வி. வாய்ப்பு வந்தது உண்மை. அதுவே தாயார் பக்திக்குரியது. வாய்ப்பைச் செயல்படுத்த வேண்டாமா?
- ✡ என்னால் முடியாது என்றே தெரியாதவர் என்னால் முடியாதுஎன அறிவது முன்னேற்றம்.
- ✡ இக்குடும்பம் அந்நிலையிலில்லை.
- ✡ தாயார் அதைக் கருதுகிறார்.
- ✡ தாயார் மனம் எப்படியிருக்கிறது?
- ✡ எப்படி இதைச் சாதிக்கலாம், அன்னை என்ன முறையைக் கூறியுள்ளார் என நினைக்கிறது.
- ✡ தாயாருக்கு என்னால் இது முடியாதுஎனத் தோன்றவில்லை.
- ✡ அன்னை முறைப்படி செய்வதானால், யார் செய்வது? செய்வது தாயாரன்றோ!
- ✡ அந்த முதற்படிக்குத் தாயார் தகுதியற்றவர்என நம்பமுடியவில்லை.



- ✡ அதுவே உண்மை.
- ✡ தாயாருக்கே அந்த உண்மை புரியும்வரை எதுவும் நகராது.
- ✡ எதுவும் நகராத நிலையில் இவ்வளவு நடப்பது அருளின் சிறப்பு.
- ✡ அப்படி ஒரு நாள் தாயாருக்கு 'என்னால் முடியாது'எனத் தெரிந்தால் அதை அன்னையிடம் விட முன்வருவாரா? வந்தால் தாயாருலகம் மாறும்.
- ✡ அது முதற்படி, முதற்கட்டம், முதல் நிபந்தனை.
- ✡ என்னால் சமர்ப்பணம் செய்ய முடியவில்லைஎன்று நினைக்கும் தாயார், நான் சமர்ப்பணம் செய்ய விரும்பவில்லையேஎன அறியார்.
- ✡ நாமனைவரும் தாயார் போலிருக்கிறோம்.
- ✡ நாம் எதையும் சாதிக்காமல் அவர் போலிருக்கிறோம். அவர் பெரிய வாய்ப்புகளைப் பெற்று நம் போலிருக்கிறார். சமர்ப்பணம் அவசியம். மனிதனின் இயலாமையை உணர்வதும், அதை அன்னையிடம் விடுவதும் அவசியம்.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிறர் அறியாமையைக் காணும்பொழுது அறியாமையின் புறத்தோற்றத்தைக் காண்கிறோம். நம்முடைய அறியாமையைக் கண்டால் அறியாமையின் உள்ளுறை இரகஸ்யங்கள் தெரியும்.

***அறியாமையின் உள்ளுறை இரகஸ்யங்கள் தெரியும்.***

## P.62 Her mighty plan She holds back from our sight.

**எவர் கண்ணிலும் படாமல் எடுத்த பெரும் திட்டம்.**

- ✡ தன் பெருமையையும், ஆனந்தத்தையும் திரையிட்டு மூடினாள்.
- ✡ நெஞ்சுநிறை அன்பையும் விவேகத்தையும் மறைத்துவிட்டாள்.
- ✡ அழகும், அற்புதமும் அவளுக்குரியன.
- ✡ அவற்றின் இருண்ட சாயலே நாம் கண்டது.
- ✡ அவனது தெய்வீகமும் அமிழ்ந்து தோன்றுகிறது.
- ✡ தன் பெருந்திறமையை கைநழுவ விட்டுவிட்டான்.
- ✡ தன் அனந்தத்தையும், அமைதியையும் அவனிழந்தான்.
- ✡ அவளை அறிவான்; தன்னை மறந்தான்.
- ✡ அவள் பெருமைக்காகத் தன்னைத் தியாகம் செய்தான்.
- ✡ அவளில் தான் மீண்டும் புத்துயிர்பெற விழைகிறான்.
- ✡ அனந்தத்தின் அமைதியை ஏற்று ஜனித்தவன்.
- ✡ அவள் சிருஷ்டித்திறனின் பூரிப்பு வேகம்.
- ✡ பூமியும், சொர்க்கமும் அவனுடையதே.
- ✡ பிரபஞ்ச நிர்வாகத்தை அவளிடம் ஒப்படைத்தான்.
- ✡ அவன் செயலுக்கு அவனே சாட்சி.
- ✡ அவள் அரங்கத்தின் அதிபதி அவன்.
- ✡ சொல்லையிழந்து, இறக்கையில் மறைந்தான்.
- ✡ அவளுலகில் அவன் பிறந்தான். அவள் உத்தரவுக்குக் காத்திருக்கிறான்.
- ✡ அவள் புதிரான புலன்கள் அவனுக்குப் புலப்படும்.
- ✡ புயலென மாறும் அவள் குணத்தின் சந்தர்ப்பம்.
- ✡ அவளறியாத அர்த்தத்தை அறிந்துகொள்பவன் அவன்.



- ✡ நெடுநாள் வாழ்வின் இரகஸ்யத்தை கண்டுகொண்டான்.
- ✡ அவன் வணக்கத்தை மீறிய ஜீவனுடையவள்.
- ✡ அவனது ஆசையின் பொக்கிஷமாக அவளை ஏற்றுப் போற்றுகிறான்.
- ✡ இரவு பகலாக எண்ணத்தால் ஏற்றிப் போற்றுகிறான்.
- ✡ தியாகச் சின்னமாக, வாழ்வை அர்ப்பணித்தான்.
- ✡ அவள் அன்பை அருளாகத் தேடும் அன்பன்.
- ✡ அவளில் தேடும் ஆனந்தம் அவனது லோகம்.
- ✡ அவனுடைய திறமைகள் அவள்மூலம் வளர்கின்றன.
- ✡ இறைவனின் திருவுள்ளத்தை அவளில் அவன் காண்கிறான்.
- ✡ அவள் சபையில் அவன் ஓர் அம்சம்.
- ✡ அவளருகிலிருப்பதே அவன் இலட்சியம்.
- ✡ அவள் தரும் துளி அவன் பெறும் பெருவெள்ளம்.
- ✡ அவள் செய்கை எல்லாம் அவனை ஆனந்தத்திரையாகக் கவர்ந்தன.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நம் ஆன்மாவால்மட்டும் சேவை செய்யமுடியும். அது அடுத்த ஆன்மாவைச் சென்றடையும். மனிதஉறவில் நட்பும், சேவையும் உண்டு. அவை அவர்களுடைய பண்பின் எல்லைக்குட்பட்டது. எல்லையை மீறிய சேவையோ, நட்போ இல்லை. எல்லைக்கு உட்பட்டு நட்புண்டு; சேவையுண்டு. அவை நாட்டின் பழக்கம், குடும்பப் பாரம்பரியம், அவர்களுடைய பண்பு ஆகியவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது. சட்டம் பொது. இது விதிவிலக்கு. விலக்கு சட்டத்தைப் பொய்யாக்காது.

***பண்பால் செய்யப்படும் சேவை விதிக்கு விலக்கு.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIV. The Supermind — As Creator

Page No.128
Para No.12

Let us see the other side.
There is the unitarian consciousness.
It is of indivisible Unity.
It cannot be an impossible entity.
It is not a thing without contents.
All contents have issued out of it.
All contents return to it.
Into it they disappear.
There they dissolve.
It must be original.
It must be a self-concentration.
All is contained in it.
Ours is a temporal manifestation.
It is a spatial manifestation.
But the One is constituted in another way.
It is concentrated thus.
It is utterly ineffable.
It is inconceivable.
It is Existence.



## 14. சத்தியஜீவியம் - சிருஷ்டிகர்த்தா

நாம் அடுத்த பக்கத்தைக் காண்போம்.
ஐக்கிய ஜீவியம் உண்டு.
அது பகுக்கமுடியாத ஐக்கியம்.
நமக்குப் புரியமுடியாத ஒன்றில்லை அது.
அது வெற்றிடமில்லை.
எல்லாம் அதனுள்ளிருந்து எழுந்தவை.
எல்லாம் மீண்டும் அதை நோக்கிப் போகும்.
அதனுள் அவை மறைகின்றன.
அங்கு அவை கரைகின்றன.
அது ஆதி.
அது சுயமானது.
எல்லாம் அதனுள் உள்ளது.
உலகம் காலத்தின் படைப்பு.
இடத்தாலானது உலகம்.
சத் அப்படி ஏற்பட்டதில்லை.
வேறுவகையான செறிவுடையது அது.
சொல்லுக்கு அகப்படாதது அது.
கருத்துக்குப் பிடிபடாது.
அது சத்.

**To the Nihilist it is a Void.**
**It is negative to him.**
**He images thus.**
**It is negative to our existence.**
**It is negative to what we are.**
**There is the Transcendentalist.**
**He has his own reason.**
**To him the same thing is positive.**
**But, it is, to him indistinguishable Reality.**
**The Vedanta speaks of the beginning.**
**There was the one Existence, it says.**
**It was without a second.**
**But there is the beginning.**
**Before and after it there is something.**
**It is there forever.**
**It is beyond Time.**
**We cannot describe it.**
**We cannot even call it the One.**
**We can say that nothing but That is.**
**Still, it is not fully described.**
**We can be aware of three things.**
**First, there is its original self-concentration.**
**It is the indivisible One.**
**We try to realise it as such.**
**Secondly, there is this diffusion.**
**It is an apparent disintegration.**
**Mind conceives of the universe.**
**It conceives of it as unity.**
**Thirdly, there is a self-extension.**
**It is the Truth-Consciousness.**



**சூன்யவாதிக்கு அது வெற்றிடம்.**
**அவனுக்கு அது எதிரானது.**
**அவன் அப்படிக் கற்பனை செய்கிறான்.**
**நம் வாழ்வுக்கு அது எதிரானது.**
**நம் அமைப்புக்கு அது எதிரானது.**
**சிருஷ்டியைக் கடந்த நிலையுண்டு.**
**அவனுக்கேயுரிய காரணம் உண்டு.**
**அதுவே அவனுக்கு வேண்டியதாகும்.**
**அவனுக்கு அது புலப்படாத சத்தியம்.**
**வேதாந்தம் ஆதியைக் கூறுகிறது.**
**ஆதியில் சத்திருந்தது என்கிறது.**
**அடுத்தது அதற்கில்லை.**
**என்றாலும் ஆதியுண்டு.**
**அதன் முன்னும் பின்னும் ஒன்றுண்டு.**
**அது நிலையானது.**
**அது காலத்தைக்கடந்தது.**
**நம்மால் அதை விவரிக்கமுடியாது.**
**நாம் அதை ஏகன் எனவும் கூறமுடியாது.**
**அதைத்தவிர வேறொன்றுமில்லை எனலாம்.**
**இருந்தாலும், அது முழு விளக்கமாகாது.**
**நாம் மூன்றை அறியலாம்.**
**முதலில், ஆதியான ஏகன்.**
**அது பகுக்கமுடியாத ஒன்று.**
**நாம் அதை அப்படியே அடைய முயலலாம்.**
**அடுத்தது துண்டு துண்டாகச் சிதறியது.**
**பார்வைக்கு அது அழிவை நாடுவது.**
**மனம் உலகை நாடுகிறது.**
**உலகை மனம் ஒற்றுமையாகக் கருதுகிறது.**
**மூன்றாவதாக, பிரம்மத்தின் வெளிப்பாடுள்ளது.**
**அது சத்தியஜீவியம்.**

It is firm.
It contains the diffusion.
It upholds the diffusion.
It prevents its disintegration.
It maintains its unity in diversity.
It is stable.
Also it is mutably stable.
It insists on harmony.
It seeks it in strife and collision.
They are all-pervading.
It keeps eternal cosmos.
Mind can only arrive at chaos.
The chaos eternally attempts to form itself.
This is Supermind.
This is Truth-Consciousness.
It is the Real-Idea.
It knows itself.
It is all that it becomes.

Page No.128
Para No.13

Brahman extends itself.
It is Supermind.
It contains and develops.
It develops by the Idea.
It develops out of the unity.
The unity is indivisible.
Conscious, Existence, Bliss emerge out of it.
They are triune.
It establishes a Trinity.
It does not work like Mind.
Mind arrives from the three to the One.



அது நிலையானது.
சிதறியதைத் தன்னுட் கொண்டது.
சிதறியதை ஆதரிப்பது.
அது அழிவைத் தடுக்கிறது.
அது பகுதியில் முழுமையைக் காக்கிறது.
அது நிரந்தரமானது.
அத்துடன் அது மாற்றத்தில் நிலையானது.
அது சுமுகத்தை வற்புறுத்துகிறது.
பிணக்கிலும், மோதலிலும் அது சுமுகத்தைத் தேடுகிறது.
எங்கும் ஊடுருவிப் பரவுவது.
நிலையான பிரபஞ்சத்தை அது நாடுகிறது.
மனம் குழப்பத்தை உற்பத்தி செய்கிறது.
குழப்பம் நிலையாக உருவம் பெற முயல்கிறது.
அது சத்தியஜீவியம்.
அது சத்தியம் ஜீவியமாவது.
அதுவே முழுமையான எண்ணம்.
அது தன்னையறியும்.
அது அதுவாக மாறும்.

பிரம்மம் தன்னை வெளிப்படுத்தும்.
அது சத்தியஜீவியம்.
அது கட்டுப்படுத்தி, அபிவிருத்தி செய்யும்.
அது எண்ணத்தால் அபிவிருத்தி செய்கிறது.
அது ஐக்கியத்தினின்று அபிவிருத்தி செய்கிறது.
அவ்வைக்கியம் பகுக்கப்படக்கூடியதன்று.
சத், சித், ஆனந்தம் அதனின்று வெளிப்படுகிறது.
அம்மூன்றும் ஒன்றே.
மூன்றில் ஒன்றை அது ஏற்படுத்துகிறது.
அது மனம்போல வேலை செய்வதில்லை.
மனம் மூன்றிலிருந்து ஒன்றைத் தேடுகிறது.

**It manifests the three out of the One.**
**(For it manifests and develops).**
**Yet it maintains the unity.**
**(For it knows and contains).**
**It works by differentiation.**
**It brings forward one as the effective Deity.**
**Or, it does so with the other.**
**Each contains the others involved.**
**Or they are explicit in itself.**
**This is the process of differentiation.**
**It makes it the foundation.**
**The trinity is all-constituent.**
**Out of it, it evolves.**
**It evolves the possibilities and the principles.**
**It is thus it acts.**
**Its operation is the same here.**
**It possesses powers.**
**They are development and evolution.**
**It can make it explicit.**
**That power carries other powers.**
**They are involution, envelopment.**
**It also makes it implicit.**
**There are two involutions.**
**Creation is a movement between them.**
**Spirit is one.**
**All is involved in the Spirit.**
**Out of which all is evolved downward.**
**It moves to the other pole, Matter.**
**Matter is another.**
**All is involved in Matter.**



**இது ஒன்றிலிருந்து மூன்றை வெளிப்படுத்துகிறது.**
**(ஏனெனில் அது வெளிப்படுத்தி, அபிவிருத்தி செய்கிறது).**
**இருப்பினும், அது ஐக்கியத்தை நிலைநிறுத்துகிறது.**
**(ஏனெனில் அது அறியும், ஆட்கொள்ளும்).**
**வேறுபடுத்தி அது வேலை செய்கிறது.**
**சக்தியுள்ள தெய்வமாக அது ஒன்றை வெளிக்கொண்டுவருகிறது.**
**இல்லையெனில், மற்றதுடன் அப்படிச் செயல்படும்.**
**ஒவ்வொன்றும் அடுத்ததைத் தன்னுட்கொண்டுள்ளது.**
**அல்லது, அவை வெளிப்படையானவை.**
**இதுவே மாறுபடுத்தும் வழி.**
**அதை இதன் அடிப்படையாக்குகிறது.**
**திருமூர்த்திகள் அனைத்தையும் உட்கொண்டவர்கள்.**
**அதனினின்று இது வெளிவருகிறது.**
**தத்துவங்களும், சந்தர்ப்பங்களும் அதனினின்று எழுகின்றன.**
**அவ்விதம் அது செயல்படுகிறது.**
**இங்கும் அதன் செயல் அதுவே.**
**அதற்கு சக்தியுண்டு.**
**அவை பரிணாமம், அபிவிருத்தி.**
**அது அதை வெளிப்படையாக்கும்.**
**இந்த சக்திக்கு அடுத்த சக்திகள் உண்டு.**
**அவை சிருஷ்டி, சூழ்வது.**
**மேலும் அதை உள்ளடக்கும்.**
**இரண்டு உள்ளடக்கங்கள் உள்ளன.**
**சிருஷ்டி அவற்றிடையேயுள்ள சலனம்.**
**ஆன்மா ஒன்று.**
**அனைத்தும் ஆத்மாவுள் அடங்கியது.**
**அதனினின்று அனைத்தும் வெளிப்பட்டு கீழ்நோக்கிச் செல்கின்றன.**
**அடுத்த துருவத்தை அது நாடிப் போகிறது. அது ஜடம்.**
**ஜடம் அடுத்தது.**
**அனைத்தும் ஜடத்துள் உள்ளன.**

**Out of which all evolves upwards.**
**It moves to the other pole of Spirit.**
**In this sense creation is a movement.**

*Contd...*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**மனம், அகந்தை, ஆசை, நோக்கம், உந்துதல் ஆகியவற்றைப் பூரணமாக அறிவது யோகஞானம்.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

செயலால் மனிதன் வாழ்வுடன் ஒன்றிவிடுகிறான். செயல்படாத நிலை ஆன்மீக நிலை.

***செயல் வாழ்வு; செயலற்றது ஆன்மா.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் திருவுருமாற்றம் பெற தெளிவு தேவை. உணர்வு திருவுருமாற்றம் பெறத் தெளிவு போதாது; நோக்கம் மாற வேண்டும். உடலுக்கு இந்த இரண்டும் போதா. உடலில் உள்ள ஆன்மா வெளிப்பட்டு செயல்பட்டால்தான் உடல் திருவுருமாற்றமடையும்.

***ஆன்ம வெளிப்பாட்டால்மட்டும் உடல் திருவுருமாற்றம் பெறும்.***



**அதனினின்று பரிணாமத்தால் எழுந்து அவை உயரும்.**
**அதிலிருந்து அடுத்த துருவமான ஆன்மாவை நோக்கி அது போகும்.**
**இவ்விதம் சிருஷ்டி சலனமாகிறது.**

*தொடரும்...*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**ஆர்வம் நமக்குரியது; அருள் அன்னைக்குரியது.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உணர்வில் வலுவானவரும், பலஹீனமானவரும் பாசமாக இருப்பது ஆழ்மனப் பற்றாகும். உணர்வு தன்னை வலுவாக்கிக் கொள்ள முயல்வதின் பலன் இது.

***பாசத்தால் உணர்வு தன்னை வலுப்படுத்திக்கொள்ளும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னலமற்ற தன்மை, பெருந்திறமை, பெருந்தன்மை அல்லது எந்தப் பெரிய குணம் சாதித்தாலும், தன் சாதனையை அதனால் உலகுக்கு வழங்கமுடியும். உலகமும் ஏற்றுக் கொள்ளும்.

***உலகம் ஒருவர் சாதனையால் பலன்பெற***
***அவர் தன்னலமற்றவராக இருக்கவேண்டும்.***

## இம்மாதச் செய்தி

**அன்னை இரகஸ்யம்**

**சொல்லாததிலிருக்கும்.**



## அன்பர் கடிதம்

1) 23.1.2004 வெள்ளி: எனது பக்கத்து வீட்டில் நான்கு நாட்களாக சுயநினைவு இல்லாமல் இருந்த 75 வயது பெண்மணி ஒருவர் இருந்தார். அன்று இரவு சுமார் 12 மணிக்குத்தான் எனது வேலையை முடித்துக்கொண்டு எனது வீட்டிற்குச் சென்றேன். அப்போது அங்கு ஒரே கூட்டமாகக் கூடியிருந்தார்கள். என்ன என்று கேட்டபொழுது அவர் நான்கு நாட்களாக கோமா ஸ்டேஜில் (சுயநினைவின்மை) இருப்பது தெரியவந்தது. அப்போது என்னுடைய வீட்டில் இருந்து அன்னையின் திருவுருவப்படத்தையும், மலர்களையும் அந்த பெண்மணியின் தலைமுதல் கால்வரை காண்பித்தேன். இரண்டு நிமிடம் கழித்து அந்த பெண்மணி கண்விழித்து, வாய் திறந்து பேசி அனைவரையும், "ஏன் இவ்வளவு கூட்டமாக நிற்கிறீர்கள்?" என்று கேட்டார். இது அன்னையின் அதிசயங்களுள் ஒன்று.

2) என் அண்ணார் காவேரிப்பட்டினம் உயர்நிலைப்பள்ளியில் ரெக்கார்டு கிளார்க்ஆகப் பணிபுரிந்துவருகிறார். 11.2.2004 அன்று பள்ளி முடித்து பஸ் நிலையத்தில் நின்றுகொண்டிருக்கும்போது ஒரு ஆட்டோ வந்தது. "தருமபுரி வருபவர்கள் வாருங்கள், போகலாம்" என்று ஆட்டோ ஓட்டுநர் அழைத்தார். அவர்மட்டும் ஆட்டோவில் ஏறி தருமபுரி வந்தார். பேருந்துநிலையம் அருகில் வந்தவுடன் இறங்கிவிட்டார். அவர் ஆட்டோவில் பள்ளியின் அனைத்து ஆசிரியர்களின் சம்பளப்பதிவேட்டை அந்த ஆட்டோவிலேயே தவறவிட்டுவிட்டார். அப்போது சுமார் இரவு 7 மணி இருக்கும். அவர் என்னை செல்போனில் தொடர்புகொண்டு அந்தச் சம்பளப் பதிவேடு தொலைந்துவிட்டதுஎன பதறிக்கொண்டே கூறினார். "நீ ஒன்றும் கவலைப்படவேண்டாம். அந்த பதிவேடு கிடைத்துவிடும். அன்னை இருக்கிறார், அன்னையிடம் கூறுவோம்" என ஆறுதல் கூறி தியானமையத்திற்கு நானும், என்னுடைய அண்ணாரும் சென்று அன்னையைப் பணிந்து, அந்தப் பதிவேடு கிடைக்குமாறும், அதற்குச் சிறிய காணிக்கையை அளிப்பதாகவும் வேண்டிக்கொண்டு இருக்கும் போது, என் காதில் "டாக்டர் கிருஷ்ணன் மருத்துவமனைக்கு செல்லவும்"எனக் குரல் கேட்டது. அன்னைக்கு நன்றி கூறிவிட்டு, தியானமையம்விட்டு வெளியே வந்து, இருவரும் நேராக டாக்டர் கிருஷ்ணன் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது, இவர் பதிவேட்டை தவறவிட்டுவந்த ஆட்டோ ஓட்டுநர் இவரை பார்த்து,

*"நீங்கள்தானே காவேரிப்பட்டினத்தில் இருந்து வந்தீர்கள். உங்களு-டைய பதிவேட்டை என்னுடைய வீட்டில் வைத்திருக்கிறேன்"என அவருடைய பிடமனேரியில் உள்ள வீட்டிற்கு அழைத்துச்சென்று பதிவேட்டைக் கொடுத்தார். அவருக்கும் நன்றி தெரிவித்துவிட்டு உடனே தியான மையம் வந்து அன்னைக்குக் காணிக்கையும், நன்றியையும் தெரிவித்துவிட்டுச் சென்றோம்.*

*3) 28.2.2004 அன்று அன்னசாகரத்தில் உள்ள என் மனைவியின் அக்கா அவர்கள் அன்னையை வணங்குபவர். அவர் அன்று இரவு உறங்கும்பொழுது விடியற்காலை 5 மணிக்குக் கனவில் அன்னை தோன்றி ஒரு தங்கப்புதையலை (Gold Globeஐ) கையில் கொடுக்கிறார். அவரும் மகிழ்ச்சியுடன் பெறுகிறார். மெய்சிலிர்த்து கண்விழித்துப் பார்க்கிறார். அன்று சுமார் 10 மணிக்கு அவருடைய கடைக்கு நான் சென்றபோது இந்த நிகழ்ச்சியை என்னிடம் கூறினார். "அன்னை உங்கள் வாழ்வில் ஒளிவிளக்கேற்றி வைத்து விட்டார். இனி எந்த கஷ்டமும் உங்கள் வாழ்வில் இல்லை" என்று கூறினேன். "29.2.2004 அன்று 'கோல்டன் டே'. அன்னை உங்களுக்குத் தங்கப்புதையலை அளித்திருக்கிறார். இனி வாழ்வில் ஒளிமயம்தான். எனவே அன்னைக்கு நன்றி கூறுங்கள்" என்று கூறிவிட்டு வந்தேன். இரண்டு, மூன்று நாட்கள் கழித்து ஒரு வீட்டுக் காலிமனை வாங்கினார்கள். தற்போது அந்த காலிமனையில் ஒரு பெரிய மாடிவீடாக கட்டி விரைவில் கிரஹப்பிரவேசம் செய்ய உள்ளார்கள். அவர் கனவு கண்டதற்கும், நிகழ்ச்சி நடந்ததற்கும் இடையில் ஒரே ஒரு வருடம்தான்.*

*4) 16.6.2004 அன்று 9ஆம் வகுப்பு படிக்கும் என் மகள் அன்று மாலை பள்ளி முடித்து 6 மணிக்கு பேன்சி ஸ்டோரில் மணி அல்லது கவரிங் செயின் வேண்டும் என்று கேட்டாள். என் மகளுக்கு பிடித்தமான மணியும், கவரிங் செயினும் அந்தக் கடையில் இல்லை. "சரி, வேண்டாம், வாங்கப்பா" என்று என் மகளும் அழைத்து வந்துவிட்டாள். கடையைவிட்டு வெளியே வந்த நான், "சரி, விடம்மா. அன்னை உனக்குத் தங்கசெயின் வாங்கிக் கொடுப்பதற்காகத்தான் தள்ளிப் போடுகிறார். இந்தப் பொருள் உனக்குப் பிடிக்கவில்லை"என சமாதானம் சொல்லி வீட்டிற்கு அனுப்பிவைத்தேன். அப்பொழுது மணி 6 ஆகும். அன்று இரவு 9 மணிக்குத் தொழில் மையம் சென்று வருமாறு என் முதலாளி வேலை வைத்திருந்தார். சுமார் 9.15 மணிக்கு என்னை செல்போனில் அழைத்து, "வீட்டிற்கு வந்து போ" என அழைத்தார். 9.45 மணிக்கு என் முதலாளி வீட்டிற்குச் சென்றேன்.*



*அவர் என்னை அழைத்து 2 பவுன் தங்கச்சங்கிலி ஒன்றை கையில் கொடுத்து, "இதன் விலை 6,500/-. இதற்கு 6000 ரூபாய்மட்டும் கொடுத்தால் போதும். அதுவும் மாதாமாதம் சிறிய தொகையாக கொடுத்து எடுத்துக்கொள்"என என்னிடம் கொடுத்தார். உடனே அன்னைக்கு நன்றி தெரிவித்தது மட்டுமல்லாமல், உடனே தியான மையம் வந்து அந்தச் செயினை அன்னையின் பாதங்களில் வைத்து, அன்னைக்கு நன்றி தெரிவித்துவிட்டு வீட்டிற்குச் சென்று என் மனைவியிடம் அன்று மாலைமுதல் இரவுவரை நடந்த அன்னையின் அதிசயத்தைக் கூறி குடும்பமே மகிழ்ச்சியடைந்தோம்.*

மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி வெளியீடான "அருளமுதம்" புத்தகம் ஓர் அமுதம் என்பதைவிட பொக்கிஷம், அமுதசுரபி, தங்கப்புதையல் என்று சொல்லலாம். அன்னையின் அன்பர்களாகிய நமக்கு, இந்த நூலை அன்னை நமக்கு அளித்ததற்கு நம் ஜென்மம் உள்ளவரை நன்றியறிதல் வேண்டும். ஏனெனில் அன்னையைப் பற்றியும், பகவான் ஸ்ரீ அரவிந்தரைப் பற்றியும் அறியவைத்தது மட்டுமல்லாது, நமது வாழ்க்கை மேலும் மேலும் உயர வழிகாட்டிய அன்னை அவர்களுக்கு பூரண சரணாகதி அடைந்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

புதிய கொள்கையை, பழைய சௌகரியத்திற்காக, பகுத்தறிவின்பேரில் மாற்றிக்கொள்வது தெய்வச் சேவையின் பேரில் தெய்வத்தை, தனக்குச் சேவை செய்ய வைக்க முயல்வது, மனிதத் திறமைகளில் சிகரம் வகிப்பது. தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மனிதன் செய்யும் அம்முயற்சி தன்னை ஏமாற்றுவதாகிறது.

***காப்பாற்ற முயலும் மனிதன் தன்னை ஏமாற்றிக்கொள்கிறான்.***

# ஆலங்கட்டி மழை

சமர்ப்பணன்

சுத்தம் என்றால் சிங்கப்பூர்தான் நமக்கு நினைவுக்கு வரும். சிங்கப்பூருக்கு பலமுறை சென்றுவந்திருந்ததால் நானும் சுத்தத்திற்கு உரைகல் சிங்கப்பூர்தான் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அந்த மாயை நியூஸிலாந்தில் காலடி வைத்ததும் உடனடியாக விலகிவிட்டது.

நம்மூர்ப் பெரியவர்கள் 'நாமாக ஏற்படுத்திக்கொள்ளும் நல்ல எண்ணத்திற்கும், தானாகவே சுயம்புவாக இருக்கும் நல்ல எண்ணத்திற்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு' என்று அடிக்கடி சொல்வார்கள். அதன் சாரம், நியூஸிலாந்தின் மண்ணிலும், மண்ணின் மைந்தர்களிடமும் இயற்கையாகவே ஊறிப்போயிருந்த சுத்தத்தைப் பார்த்ததும் புரிந்தது.

சிங்கப்பூர் சுத்தம், நம் நாட்டு அசுத்தத்தைவிட உயர்ந்தது என்றாலும் அது அரசாங்கம் ஏற்படுத்திய சட்டத்தின்மூலமும், தண்டனை தருவதன்மூலமும் ஏற்பட்டது என்பதால் அதில் ஒரு செயற்கைத்தனம் எப்போதும் இருக்கும். யாரும் சொல்லாமல், கட்டுப்பாடு என்று எதுவுமே இல்லாமல், இயல்பாகவே சுத்தமாக இருப்பதால், நியூஸிலாந்தின் சுத்தத்தின் உயர்வை எதோடு ஒப்பிடுவது?

இப்படியாகப் பரவசப்பட்டுக்கொண்டு ஆக்லாந்து நகர விமான நிலையத்தைவிட்டு வெளிவே வந்ததும், "வாருங்கள் சந்துரு" என்று உற்சாகமாக வரவேற்பு தந்தார் கண்ணப்பன். இவர் என் பால்ய சிநேகிதர். கடந்த ஐந்து வருடங்களாக நியூஸிலாந்தில் வாழ்ந்து வருகிறார்.



எனக்கு வேலை கிடைக்கும்வரை தம் வீட்டில் நான் தங்கிக்கொள்ள பெரிய மனத்துடன் சம்மதித்திருந்தார்.

''இங்கே பாய் விரிக்காமலேயே பிளாட்பாரத்தில் தூங்கலாம் போலிருக்கிறதே. எவ்வளவு சுத்தம்!'' என்று வியந்தேன்.

''தூங்கலாம்தான். ஆனால் குளிருமே'' என்று சிரித்தார் கண்ணப்பன்.

இயற்கை அழகிலும், சுத்தத்தின் உயர்விலும் இதயத்தை பறிகொடுத்திருந்த எனக்கு நான் ஸ்வெட்டர் போடாமல் இருந்தது அப்போதுதான் உறைத்தது. திடீரென குளிர ஆரம்பித்தது. ஸ்வெட்டரைப் போட்டுக்கொண்டேன்.

கண்ணப்பனின் காரில் ஏறிக்கொண்டேன். ஊதா நிறத்தில் நீண்ட படகுபோலிருந்த மிட்சுபிஷி காரில் நானும் பயணம் செய்யமுடியும் என்று இதுவரை பகல்கனவுகூடக் கண்டதில்லை.

மெத்துமெத்தென்று மிருதுவாக இருந்த கார் சீட்டில் உட்கார்ந்தால் மகிழ்ச்சி. சத்தமின்றி சரேலென்று கார் நகருவதைப் பார்த்தால் சந்தோஷம். பனித்துளிகள் கார் கண்ணாடிமீது பூமழையாகப் பெய்து சிதறுவதைப் பார்த்தால் பரவசம். பட்டிக்காட்டான் பட்டிணத்தைப் பார்த்த பழைய கதை அன்று உண்மை நிகழ்ச்சியாக மாறியது.

"கார் பிரமாதமாக இருக்கிறது" என்று அடக்கமுடியாத மகிழ்ச்சியை வெளிப்படுத்தினேன்.

"கேலி செய்யாதீர்கள். இது மிகவும் பழைய கார். இதைத் தள்ளுபடி விலையில் கார் சந்தையில் வாங்கினேன்" என்றார் கண்ணப்பன்.

எனக்குத் தலை சுற்றியது. பழைய காரே இப்படி என்றால் புதிய கார் எப்படி இருக்கும்?

"கண்ணப்பன், இது உண்மையாகவே பழைய கார்தானா?" என்று கேட்டேன்.

"சந்தேகமே வேண்டாம். உங்களுக்கு வேலை கிடைத்ததும் முதல் காரியமாக கார் சந்தைக்குப் போய் இதேபோல ஒரு கார் வாங்கி விடலாம்" என்றார் கண்ணப்பன்.

எவ்வளவு கெட்ட எண்ணம்! தான் பழைய கார் ஓட்டுவதனால் நானும் பழைய கார் ஓட்டவேண்டுமென்று நினைக்கிறார். இவரெல்லாம் ஒரு நண்பரா? எனக்கு ஒரு வேலை கிடைக்கட்டும். அப்போது

எப்படியெப்படிப் பேசவேண்டுமோ அப்படியப்படிப் பேசிக்கொள்கிறேன். இவர் வீட்டில் சில நாட்கள் இலவசமாகத் தங்கப்போவதால் இப்போது எதுவும் பேசக்கூடாது, தவறாகிவிடும்.

“கண்ணப்பன், உங்களுக்கு மாதம் எவ்வளவு வருமானம் வரும்?” என்று கண்ணப்பனைக் கேட்டேன். கேட்கக்கூடாத கேள்விதான். ஆனால், எவ்வளவு நேரம்தான் மனதின் குறுகுறுப்பைப் பொறுத்துக் கொள்வது?

கண்ணப்பனோ இந்திரஜித்திற்கே வித்தை காட்டும் ஆசாமி. “என்ன பிரமாதமாக வந்துவிடப்போகிறது? வரவிற்காக செலவு, செலவிற்காக வரவு என்று ஏதோ வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது” என்றார்.

ஒருவேளை நான் கடன்கிடன் கேட்கப்போகிறேன் என்று பயந்து விட்டாரா?

சிரித்துக்கொண்டே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தேன். பராக்கு பார்த்து பரவசமடைய குழந்தையாகத்தான் இருக்கவேண்டுமா என்ன!

“இந்த ஊரில் என்னவெல்லாம் விசேஷங்கள் உண்டு?” என்று கேட்டேன்.

“ஆலங்கட்டி மழை என்றால் எல்லோருக்கும் இங்கு பயம்” என்றார் கண்ணப்பன்.

“ஆலங்கட்டி மழையா?” என்று கேட்டேன்.

“மழைத்துளி ஒவ்வொன்றும் ஐஸ்கட்டியாக, சிறு கூழாங்கல்போல் இருக்கும். மேலே பட்டால் வலிக்கும். திடீரென எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் படபடவென்று பெய்யும். அது பெய்தால் ஒரு நிமிடம்கூட வெளியே நிற்கமுடியாது. ஆக்லாந்துவாசிகள் எல்லோரும் வீட்டிற்குள் ஓடிஒளிந்துகொள்ளவேண்டியதுதான்” என்றார் கண்ணப்பன்.

“வேறு என்ன விசேஷங்கள் உண்டு?” என்று கேட்டேன்.

“நமக்கு பரிச்சயமே இல்லாத சில அபூர்வமான சங்கதிகள் இங்கு உண்டு” என்றார் கண்ணப்பன்.

“அப்படி என்ன நமக்குத் தெரியாத அபூர்வமான சங்கதிகள்?” என்று ஆர்வத்துடன் கேட்டேன்.

“பொய்யே தெரியாத உண்மை, சட்டத்தை மதித்து நடக்கும் தன்மை, மனிதன் அனைத்தையும்விட முக்கியம் என்ற நடைமுறை.....” என்று அடுக்கிக்கொண்டுபோனார் கண்ணப்பன்.



“ஏதேது, நீங்களே இந்த நாட்டுக்காரராகிவிட்டீர்கள்போலிருக்கிறதே” என்றேன்.

“இன்னமும் ஆகவில்லை என்பதுதான் என் வருத்தம். என் இந்தியப் பிறப்போடு, இந்த உயர்ந்த குணங்களும் சேர்ந்தால் எவ்வளவு பெருமையாக இருக்கும்!” என்றார் கண்ணப்பன்.

“அப்படி இருந்தால் பிழைக்கமுடியாது. கொஞ்சம் நெளிவு சுளிவாகத்தான் வாழவேண்டும். அதுதான் நடைமுறை யதார்த்தம்” என்றேன்.

‘இளிச்சவாய்த்தனம்’ என்று நாக்குநுனிவரை வந்த வார்த்தையைக் கட்டுப்படுத்திக்கொண்டேன்.

மயில்வண்ணப்பட்டுச்சேலையில் மல்லிகைப்பூக்கள் சறுக்குவதுபோல், மேடுபள்ளமில்லாத பரந்த கரிய சாலையில் கலர்கலராக கார்கள் சத்தமின்றி சறுக்கிக்கொண்டு சென்றன.

“கண்ணப்பன், சாலை கூட்டமின்றி இருக்கிறது. நான் சிறிது தூரம் கார் ஓட்டட்டுமா?” என்று ஆர்வத்துடன் கேட்டேன்.

ஒரு வினாடி தயங்கினார் கண்ணப்பன்.

“சந்துரு, நீங்கள் கார் ஓட்டுவீர்கள் என்று தெரியும். ஆனால் இங்கே கார் ஓட்ட இந்த நாட்டு லைசென்ஸ் வேண்டும். குறைந்தபட்சம் இந்தியாவிலிருந்து எடுத்துவந்த இன்டர்நேஷனல் பெர்மிட்டாவது வேண்டுமே!” என்றார் கண்ணப்பன்.

“என்னிடம் இரண்டும் இல்லை” என்றேன்.

“லைசென்ஸ் இல்லாமல் ஓட்டுவது ஆபத்து” என்றார் கண்ணப்பன்.

“சிறிது தூரம்தானே. அதில் என்ன ஆகிவிடப்போகிறது? நீங்கள்தான் என் கூடவே இருக்கிறீர்களே” என்றேன்.

மீண்டும் தயங்கினார்.

“எல்லா நாடுகளிலும் போக்குவரத்துச் சட்டம் இருந்தாலும், இந்த நாட்டில் மிகவும் கண்டிப்பாக இருப்பார்கள். ஏதாவது சின்ன பிரச்சினை என்றாலும் வெளிநாட்டுக்காரரான நீங்கள் இந்த நாட்டில் இருப்பதே பெரிய பிரச்சினையாகிவிடும்” என்று பயந்தார் கண்ணப்பன்.

“அதெல்லாம் ஒன்றும் ஆகாது. உங்களுக்கு விருப்பமில்லை என்றால் நான் ஓட்டவில்லை” என்று சிறிது வருத்தத்துடன் சொன்னேன்.

சிறிது நேரத்திற்குப்பிறகு, "சரி, நீங்கள் மிகவும் ஆசைப்படுகிறீர்கள். சிறிது நேரம் காரை நீங்கள் ஓட்டுங்கள்" என்றார் கண்ணப்பன்.

உற்சாகமாக காரை ஓட்ட ஆரம்பித்தேன். இந்தியாவில் மாருதி காரையும், அம்பாஸிடர் காரையும் மட்டுமே நன்றாக ஓட்டப் பழகியிருந்த எனக்கு, முதலில் சிறிது பதற்றமாக இருந்தாலும், ஓரிரு நிமிடங்களில் நிதானம் வந்துவிட்டது.

"நீங்கள் கவலையே படாதீர்கள் கண்ணப்பன். பார்முலா ஒன் கார் ரேஸில் கார் ஓட்டுமளவுக்கு எனக்குத் திறமை உண்டு. என்ன, அப்படி ஒரு சந்தர்ப்பம் இன்னமும் அமையவில்லை. அதனால்தான் இந்த உலகத்திற்கு நான் யாரென்று சரியாகத் தெரியவில்லை" என்று என் அசாத்தியத் திறமையைப்பற்றி விவரித்தபடி காரை ஓட்டினேன்.

சிறிது தூரம் சென்றதும் கார்கள் வரிசையாக நிற்பது தெரிந்தது. விஷயம் விளங்காமல் நானும் காரை மெதுவாக நிறுத்தினேன்.

கண்ணப்பனுக்கு முகம் வெளிறியது.

"என்ன நடக்கிறது? என்று கேட்டேன்.

"போலீஸார் சோதனைபோடுகிறார்கள்" என்றார் கண்ணப்பன்.

கண்ணப்பனின் பயம் என்னையும் தொற்றிக்கொண்டது.

"இப்போது என்ன செய்வது? நாம் இடத்தை உடனே மாற்றிக் கொண்டுவிடலாமா? நீங்கள் டிரைவர் ஸீட்டுக்கு வந்துவிடுங்களேன்" என்றேன்.

"வேண்டாம் சந்துரு. அப்படிச் செய்தால் போலீஸார் கவனம் நம்மீது திரும்பிவிடும்" என்றார் கண்ணப்பன்.

"இந்த ஊரில் உங்களுக்குத் தெரிந்த பெரிய மனிதர்கள் யாரேனும் உண்டா? அவர்கள் பெயரைச் சொன்னால் போலீஸ்காரர் விட்டுவிடுவார்" என்றேன்.

"அப்படி யாரையும் எனக்குத் தெரியாதே" என்றார் கண்ணப்பன்.

"ஏதேனும் பணம் கொடுத்துப்பார்க்கலாமா? என்று கண்ணப்பனிடம் மெதுவாகக் கேட்டேன்.

"இங்கே போலீஸ்காரர்கள் இலஞ்சம் வாங்கமாட்டார்கள். அதற்கு வேறு நமக்குத் தனியாகத் தண்டனை தருவார்கள்" என்றார் கண்ணப்பன்.



'பத்திற்குள் எண் ஒன்றைச் சொல். உன் நெஞ்சிற்குள் யாரென்று சொல்வேன்' என்று ஆருடக்காரன் கேட்கும்போது, 'பதினெட்டு' என்று பதில் வந்தால், மேற்கொண்டு என்ன பேசமுடியும்?

தப்பித்துக்கொள்ள உருப்படியாக எந்த வழி சொன்னாலும் அதை மறுத்துப் பேசும் கண்ணப்பனைப் பார்க்கப் பார்க்க ஆத்திரம் பொங்கியது.

தண்டனை எனக்கல்லவா கிடைக்கப்போகிறது. இவருக்கென்ன வந்தது? திடீரென்று பொறிதட்டியதுபோலிருந்தது. என்னை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பிவிட்டால், எனக்காகச் செய்யப்போகும் செலவு மீதமாகும் என்பதால் இப்படி நடந்துகொள்கிறாரோ?

"என்ன கண்ணப்பன், நான்தான் அறிவில்லாமல் கார் ஓட்டுகிறேன் என்று சொன்னால் நீங்களாவது உறுதியாக மறுத்திருக்கக்கூடாதா? என்னைப் பிடித்துவிட்டால், திரும்ப இந்தியாவிற்கே அனுப்பி விடுவார்களே? இப்படி என் வாழ்க்கையைப் பாழாக்கிவிட்டீர்களே" என்று புலம்ப ஆரம்பித்தேன்.

கண்ணப்பன் பதில் பேசவில்லை.

சென்னையில் வேலையை இராஜினாமா செய்துவிட்டு, வீட்டை காலி செய்துவிட்டு, மனைவியை மாமனார் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, எவற்றையெல்லாம் விற்கமுடியுமோ அவற்றையெல்லாம் விற்றுவந்த பணத்தில் டிக்கெட் வாங்கிக்கொண்டு நியூஸிலாந்திற்கு வந்தேன். இனி இந்தியா திரும்பி, வீடில்லாமல், வேலையில்லாமல், பணமில்லாமல் என்னதான் செய்யப்போகிறேன்?

பதற்றம் மெல்ல மெல்ல பயமாக மாறியது. சாதாரணமான பயமில்லை. ஜீவனையே உலுக்கும் பயம். வயிறு கலங்கியது. கலக்கத்தின் நடுவில் பெரிய பந்துபோல் ஏதோ ஒன்று அடிவயிற்றில் திரண்டது. அந்தப் பந்து மெல்ல மெல்ல மேலெழுந்து நெஞ்சை நோக்கி நகர்ந்தது. காது நுனிகள் சூடாகின. சுவாசம் பெருமூச்சாக மாறியது. கண்களில் இலேசாக நீர் துளிர்த்தது.

'இறைவா, இதுவா என் விதி?'

திடீரென எங்கேயோ எப்போதோ படித்த வரிகள் நினைவுக்கு வந்தன. 'எப்போது எதுவுமே காப்பாற்ற முடியாது என்ற நிலை உருவாகிறதோ, அந்த நிமிடமே இறைவனை அழைக்கச் சரியான தருணம்'.

இன்னும் பத்துக் கார்கள்தாம் எங்கள் காரின் முன்னால் இருக்கின்றன. மூன்று, நான்கு நிமிடங்களில் என்முறை வந்துவிடும். அதற்குள் பாவம், கடவுள்தான் என்ன செய்துவிடமுடியும்?

கடவுளாலும் என்னைக் காப்பாற்றமுடியாது என்பது தெளிவாகப் புரிந்தது. இருந்தாலும் செய்வதற்கு நானறிந்த வழிகள் எதுவுமில்லை என்பதால் கடவுளை நினைத்து அழைத்தேன்.

'கடவுளே, ஒரு பாவமும் அறியாத எனக்கு ஏன் இந்தச் சோதனை? தயவுசெய்து என்னைக் காப்பாற்றுங்கள். கடவுளே, கடவுளே, கடவுளே' என்று வாய்விட்டே சொல்ல ஆரம்பித்தேன்.

கடவுள் என்னைக் காப்பாற்ற வரவில்லை.

என் முன்னால் எட்டு கார்கள்தான் இருந்தன.

உடனே பிரார்த்தனையைத் தீவிரமாக்கினேன்.

ஆனால், ஒன்றும் நடக்கவில்லை.

என்னுள் வேகமும், தவிப்பும், பதற்றமும் அதிகமாயின. 'கடவுளே, என்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றினால் செலவுபோக மீதம் இருக்கும் என் முதல் மாத சம்பளத்தைக் காணிக்கையாகத் தருகிறேன்' என்று மனமுருகி வேண்டிக்கொண்டேன்.

அப்போதும் கடவுள் என்னைக் காப்பாற்ற வரவில்லை.

கடவுளுக்கு அளவற்ற சக்தி இருப்பதாக நான் கேள்விப்பட்டது பொய்யா? உண்மையாகவே கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா?

என் முன்னால் ஆறு கார்கள்தான் இருந்தன.

நானென்ன பெரிய தவறு செய்துவிட்டேன்? சிறிது தூரம் கார் ஓட்ட ஆசைப்பட்டேன். அது தவறா?

சரி, லைசென்ஸ் இல்லாமல் ஓட்டிவிட்டேன். அது சிறிய தவறுதான். அதற்காக இவ்வளவு பெரிய தண்டனையா?

காரணத்தைப் புரிந்துகொண்டு, செய்த தவற்றை மனமும், உணர்வும் ஓரளவு ஏற்றுக்கொண்டதும் மனம் நிதானமடைவதுபோலவும், பயம் விலகுவதுபோலவும் இருந்தது. ஏதோ தெளிவு பிறப்பதுபோலிருந்தது. அந்தத் தெளிவே அடுத்தக் கட்டத் தெளிவைத் தந்தது.

எது எப்படி இருந்தாலும், நான் கடவுளை எப்படி நம்புவது? என் பிரார்த்தனை பலிக்கவில்லையே.



தான் செய்த தவற்றைத் தானே உணரத் தொடங்கியபோது ஏற்பட்ட தெளிவும், நிதானமும், தெம்பும் தீவிரமாகப் பிரார்த்தனை செய்தபோது ஏன் ஏற்படவில்லை?

தன்னைத் தானே தெரிந்துகொள்வதுதான், கடவுளைத் தெரிந்து கொள்ளும் வழிபோலும்.

என் முன்னால் இன்னும் நான்கே கார்கள்தாம் இருந்தன.

நான் செய்தது மிகப்பெரிய தவறுதான். லைசென்ஸ் இல்லாமல் கார் ஓட்டுவது குற்றம் என்று தெரிந்தும், அதைச் செய்தேன். இனி இந்தத் தவற்றை இன்னொரு முறை செய்யமாட்டேன். நடப்பது நடக்கட்டும்.

கார் ஜன்னல் வழியாக விரிந்துகிடந்த வானத்தைப் பார்த்தேன். தூரத்தில் ஒரு விமானம், உயரே உயரே ஏறி உலோகப்பறவையாகப் பறந்துசென்றது.

இன்னும் ஒரு நிமிடத்தில் நான் வெளிநாடு வர பல ஆண்டுகள் செய்த கடும்முயற்சி, எதிர்காலத்தைப்பற்றிய கனவுகள் அனைத்தும் பறிபோய்விடும்.

பல ஆண்டு வாழ்க்கையை, ஒரு நிமிடம் முடிவு செய்யமுடியுமானால், காலத்தில் வாழ்வது என்பதே அர்த்தமற்றதா? நிலையற்றதா?

எனக்குக் கவலையாக இருந்தது.

மனிதனுக்குக் கவலை உண்டு. அவன் கவலையை விட்டுவிட்டால் கவலை இல்லாத நிலை உண்டு.

கார் இருக்கிறது. காரை விட்டுவிட்டால் கார் இல்லாத நிலை இருக்கவே இருக்கிறது.

அப்படியானால் காலத்தை விட்டுவிட்டால் காலமற்ற நிலையில் இருக்கமுடியுமா? ஆனால் மனிதச் செயல்கள் காலத்தில்தானே நடக்க முடியும்?

அதற்கு என்ன வழி?

பேருந்தில் பயணம் செய்யும்போது சில நிமிடங்களுக்கு ஒரு முறை மைல்கல் கண்களில் படும். இன்னமும் இவ்வளவு கிலோமீட்டர்கள் போகவேண்டும், இவ்வளவு நேரம் பிரயாணம் செய்யவேண்டும் என்று மனம் சலிக்காமல் கணக்குப்போடும்.

விமானத்தில் ஏறி, உயரத்தில் பறக்கும்போது, கீழே பார்த்தால் எல்லா மைல்கற்களும் ஒரே சமயத்தில் தெரியும். அப்போது எதை வைத்து காலத்தைக் கணக்குப் போடுவது?

அனைத்தும் ஒரே சமயத்தில் தெரிவதால், ஓரளவிற்கு அது காலமற்ற நிலையைக் காட்டுகிறது. எந்த இடத்திற்குப் போகவேண்டுமோ, விமானத்தில் அங்கே விரைவாகப் போகமுடிகிறதே. காலமற்ற நிலையைப் போன்ற நிலையிலிருந்து செயல்படுவதால் அது சாத்தியமாகிறதா?

வானத்தில் மிதந்து சென்றுகொண்டிருந்த விமானத்தை பார்த்தவண்ணம் ஏதேதோ யோசித்துக்கொண்டிருந்த எனக்கு எதுவுமே ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

என் முன்னால் இரண்டே கார்கள்தாம் இருந்தன.

காலமும், காலமற்ற நிலையும் சேரும் இடத்தில் எப்போதும் இருக்கப் பழகிக்கொண்டால் இரண்டையும் அனுபவிக்கலாம். காலமற்ற நிலையில் இருந்துகொண்டு, காலத்தில் காரியத்தைச் செய்தால் அனைத்தும் உடனே நடக்குமல்லவா? அந்த இடத்தை எப்படி அடைவது? புரியவில்லை.

இனி என்னை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பினாலும் கவலை இல்லை. பூரண நிதானமும், அளவற்ற பொறுமையும் என்னை நிரப்பின. இந்தக் கணம்முதல் பொறுமையுடன், நிதானமாக என் எல்லா செயல்களையும் விரைவாகவும், நேரந்தவறாமலும் செய்வேன். இது உறுதி.

எனக்குப் புல்லரித்தது.

அட, இதுதான் அதுவா! காலமும், காலமற்ற நிலையும் ஒன்றாகச் சேரும் இடத்தைப் பாமரன் அடையும் உபாயம் இதுதானா!

மனம் சலனத்தை இழந்தது. என் முன் கணக்கற்ற கோடானுகோடி ஆண்டுகள் இருப்பனபோலவும், நான் விரும்பினால் கோடானுகோடி ஆண்டுகளும் வினாடிகளாக மாறிவிடும்போலவும் ஓர் உணர்வு.

காலமும், காலமற்ற நிலையும் ஒன்றாகச் சங்கமமாகின்ற சைமல்டானியஸ் இன்டகராலிடி என்கிற நிலை இதுதானா!

என் முன்னால் ஒரே ஒரு கார்தான் இருந்தது. இன்னும் அரை நிமிடத்தில் என் வாழ்க்கை முடிந்துவிடும்.

'எனக்கு ஒரு கோடி வயதானால் என் முகம் எப்படி இருக்கும்?' என்று யோசித்தேன். சிரிப்பு வந்துவிட்டது. வேளைகெட்டவேளையில் சிரிக்கும் என்னை, கண்ணப்பன் விசித்திரமாகப் பார்த்தார்.



திடீரென்று சடசடவெனப் பெருஞ்சத்தம்.

ஆலங்கட்டி மழை!

பெரிய பெரிய ஐஸ்கட்டிகள் கார்களின்மீது ஆவேசமாக விழுந்தன. ஐந்தே வினாடிகளில் முழுவதும் நனைந்துவிட்ட போலீஸ்காரர் பாதுகாப்புத் தேடி தன் காருக்குள் நுழைந்து, கதவுகளை மூடிக்கொண்டார்.

ஆலங்கட்டி மழை வலுத்தது.

போகிறபோக்கைப்பார்த்தால் மழைநிற்பதுபோல தெரியவில்லை. கார் வரிசை நீண்டுக்கொண்டேபோனது.

நேரம் நழுவியது.

கார்களை எவ்வளவு நேரம் காக்கவைப்பது என்ற தர்மசங்கடத்திற்கு ஆளான போலீஸ்காரர் கார் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தார். புன்னகையுடன் எல்லாக் கார்களையும் போகச்சொல்லி சமிக்ஞை செய்துவிட்டு, தம் காரை கிளப்பி எதிர்த்திசையில் ஓட்டிக்கொண்டு சென்றார்.

“கண்ணப்பன், காரை நீங்களே ஓட்டுங்கள். நேராகப் போக்குவரத்து ஆபீஸ் சென்று லைசென்ஸ் வாங்க விண்ணப்பித்துவிட்டு, பின் வீட்டுக்குப் போகலாம்” என்றேன்.

கண்ணப்பன் புன்னகைத்தார்.

கார்கள் நகரத் தொடங்கின.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பகுத்தறிவு, தர்க்கம், நியாயம் மனத்திலிருந்து உணர்வுக்குப் போகவோ, ஆன்மாவுக்குப் போகவோ உதவா. உணர்வில் உள்ளவர் வலிமையால் செயல்படுகிறார்கள். ஆன்மாவுக்குப் போக வலிமைவேண்டும். இரண்டு இடத்திலும் பகுத்தறிவு பலன் தாராது. வேலைக்கு வெடிவைக்கும்.

# கவிதாஞ்சலி

1. அழைக்குங்கால் அமுதஊற்றாகும் அன்னையின் நாமமே.

2. உரைக்குங்கால் ஓடிவரும் உவகைப்பெருக்கு.

3. உன்னுங்கால் ஒளிர்விடும் நம்பிக்கைச்சுடர்.

4. எண்ணுங்கால் எதிர்வரும் இன்பங்கள் பல கோடி.

5. பேணுங்கால் பெருகிவரும் வாய்ப்புகள்.

6. வணங்குங்கால் வளர்ந்துவரும் வசதிகள்.

7. படிக்குங்கால் பற்பல ஞானங்கள் புலப்படுமே.

8. பாடுங்கால் பரவசம் பொங்கி இலயித்திடுமே.

9. நினைக்குங்கால் நெஞ்சம்தான் நெகிழ்ந்திடுமே.

10. உணருங்கால் ஊனும், உயிரும் உருகிடுமே.

11. உறங்குங்கால் உன்னுள்ளே ஓர் அமைதி உறைந்திடக் காண்பாயே.

- சுந்தரவதனி



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**871) அம்முனையில் அன்னையோடு தொடர்பிருந்தால் இந்த 5 நிபந்தனைகளும் தாமே சேர்ந்து நினைத்த காரியம் முடியும்.**

*அன்னையின் தொடர்பு அனைத்தின் தொடர்பு.*

**872) இந்தச் சட்டத்தை நாமறிவது நடைமுறையில் செயல்பட ஓரளவு உதவும்.**

*சட்டம் செயல்பட உதவும்.*

- ✡ ஆச்சரியமான விஷயங்கள் நமக்குப் புரிவதில்லை.
- ✡ புரியவில்லை என்பதால்தான் ஆச்சரியம் வருகிறது.
- ✡ சில சமயம் அப்படிப்பட்ட விஷயங்கள் புரியும்.
- ✡ உதாரணமாகத் தைரியமாக இருந்தால் எதிரி அடங்குவான் என்று புரிவதால் தைரியம் வாராது.
- ✡ தைரியம் சாதிக்கும் என்று புரிவது அறிவு.
- ✡ அறிவிருப்பதால் அதைச் செய்யமுடியும் என்று பொருளில்லை.
- ✡ அவசரப்பட்டால் விலை அதிகமாகும்; அவசரமில்லை என்றால் விலை குறையும், படியும் என்பதால் அவசரப்படாமலிருக்கமுடியாது.
- ✡ தெரிவது இன்றில்லை என்றாலும் ஒரு நாள் அதைச் செய்ய முயன்றால் முதற்படி எடுத்துவைக்க உதவும்.
- ✡ அன்னையை அறிந்த அன்பர்க்குட்கு சட்டம் வேறு.
- ✡ எது சாதாரண மனிதனுக்கு நிச்சயமாக முடியாதோ, அது அன்பர்க்கு நிச்சயமாக முடியும்.

- ✡ **அது முடிய உதவுவது இந்த அறிவு.**
- ✡ **அறிவிருந்தால் - ஷேக்ஸ்பியர் எப்படி எழுதினார், சர்ச்சில் எப்படிப் போரை வென்றார், ஐன்ஸ்டீன் எப்படி மேதையானார் என்ற அறிவிருந்தால் - அன்பர்கள் அதற்குரிய முயற்சியை எடுத்தால் பலிக்கும்.**
- ✡ **ஷேக்ஸ்பியர் எப்படிக் கவியானார் என்பதையும், ஐன்ஸ்டீனுடைய மேதாவிலாசம் எங்கிருந்து வருகிறது என்ற விஷயங்களை பகவான் ஸ்ரீ அரவிந்தர் விளக்கமாக எழுதியுள்ளார்.**
- ✡ **உலகுக்குப் புதிரானவற்றை தெளிவான நீண்ட விளக்கமாக ஸ்ரீ அரவிந்தர் எழுதியுள்ளார்.**
- ✡ **முயற்சியை, சரணம் செய்தால் ஒரு க்ஷணம் அப்பெருந்திறன் வந்து போகும்.**
- ✡ **வந்தது போகாமல் நீடிக்க சரணாகதி பலித்தது நீடிக்கவேண்டும்.**
- ✡ **இவை யோகத்தை மேற்கொண்டவர்க்கு எளிது, வாழ்வில் உச்சக் கட்டம்.**
- ✡ **வாழ்வில் அதிர்ஷ்டம் முதற்படி. அதை எல்லா அன்பர்களும் பெறலாம்.**
- ✡ **அதிர்ஷ்டத்திற்கும், அருளுக்கும், யோகத்திற்கும், சித்திக்கும் சட்டம் ஒன்றே; பெறும் நிலை வேறு.**

ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஜோஸ்யர் உடன் உள்ளவர்களிடம் ஆர்வமாக அவர்கள் நட்சத்திரத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது சர்வர் காபி கொண்டுவந்தான். அவனை நோக்கி, “உன் கையைக் காட்டு” என்றார். அவன் விருப்பமில்லாமல் காட்டினான். “இது அதிர்ஷ்ட ரேகை” என ஒரு ரேகையைப் பார்த்துச் சொன்னார். சர்வர் கேலியாக சிரித்து, “அதிர்ஷ்டம் என்றால் என்ன? இப்பொழுது கிடைக்கும் 2 இட்லி இனி எனக்கு 4 இட்லியாகக் கிடைக்கும்” என்றான். இது பெரிய விவேகம். உலகமே தலைகீழாகப் புரண்டாலும் நமக்குள்ளதுதான் கிடைக்கும் என்பது நம் நாட்டு விவேகம். இது பரம்பரை ஞானம். இது பெரிய உண்மை.



- ✡ **அன்னை வந்தபின் அது எப்படி மாறுகிறது என்பதில் ஒரு பகுதியை நெம்பர் 870இன் வாயிலாகக் கூறினேன்.**
- ✡ **அதை ஏற்றுப் பெரும் பயனடைபவரும் தம் மனப்போக்கால் மேற்கூறிய சட்டம் உண்மை என்று முடியும்படி நடக்கலாம்.**

ஒரே சந்தர்ப்பத்திலுள்ள இருவர் ஜாதகப்படி ‘அதிர்ஷ்டம்’ என்று புரிந்துகொண்டால், அதில் ஒருவர் அன்பரானால், அடுத்தவர் அன்பராய் இல்லாவிட்டால், அவர்கள் வாழ்வு மாறி வளரும். அதுபோன்ற இருவர் பாங்க் மானேஜராக இருந்தனர். அதிர்ஷ்டம் ஒருவரைப் பெரிய அதிகாரி ஆக்கியது. அது அவர் வாழ்வில் எதிர்பாராதது. அன்பரை அதே அதிர்ஷ்டம் சிறிய பாங்கிலிருந்து பெரிய பாங்க்கிற்கு எடுத்துப்போய் சேர்மனாக்கியது. அதிர்ஷ்டம் என்பது உண்மை. அதற்கு வாழ்விலும், அன்னையிலும் அளவுகடந்த மாற்றம் உண்டு.

1964இல் நேரு காலமானபொழுது குல்ஜாரிலால் நந்தா உள்துறை அமைச்சராக, மந்திரி சபையில் நெ.2ஆக இருந்தார். அடுத்த பிரதமரை தேர்ந்தெடுக்கும்வரை 15 நாட்கள் தற்காலிகமான பிரதமராக இருந்தார். நெ.3ஆக மொரார்ஜி தேசாய் இருந்தார். பிரதமர் பதவி அவருக்கு என்று அனைவரும் கருதினர். நெ.2 நந்தாவுக்கு கட்சியில் ஆதரவில்லை. சாஸ்திரி நெ.4, அவருக்கு இலாகா இல்லாத பதவி. ஆனால் அவர் நேருவுடன் அன்னையை 6 மாதங்களுக்குமுன் சந்தித்தவர். அவர் பிரதமரானார். இது எவரும் எதிர்பாராதது. 1966இல் சாஸ்திரி காலமானார். அப்பொழுது இந்திரா பிரதமரானார். எவரும் எதிர்பார்க்காதது. அவரும் நேருவுடன் அன்னையைச் சந்தித்தவர். இது அன்னை, இல்லாத அதிர்ஷ்டத்தை உற்பத்தி செய்து தருவது. 1966இல் காமராஜை 5 முதன்மந்திரிகள் பிரதமராகும்படி வேண்டினர். அவரும் நேருவுடன் அப்பொழுது அன்னையைச் சந்தித்தவர். சாஸ்திரிக்கும், இந்திராவுக்கும் கொடுத்ததை அன்னை காமராஜுக்கும் கொடுத்தார். “எதற்கும் அளவுண்டு அல்லவா?” என்ற பரம்பரை விவேகத்தை காமராஜ் நம்பியதால் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகப் பிரபலமாக நெடுநாளிருந்தாலும், பிரதமராக முடியவில்லை. அதிர்ஷ்டம் வந்தாலும், மனம் ஏற்காவிட்டால் அதிர்ஷ்டம் பலிக்காது. இப்புதிய Force சக்தி

புவியில் செயல்படுவதால் திறமையுள்ள அன்பர்கள் நம்பிக்கையுடன் உண்மையாகச் செயல்பட்டால் வாய்மொழி அவர்கள் வாழ்வில் அபரிமிதமாகப் பலிக்கும் என்று நெம்பர் 870 செய்தி கூறுகிறது. 871, 872 அவை உயர்ந்தும், தாழ்ந்தும் செயல்படும் வகை.

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**காலனை, கற்பு வெல்லும் எனினும் கடைசிவரை பலன் தெரியாது.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இடையறாத தரிசனம் நாடுபவர் மனிதவாழ்வில் சிறப்புற வேண்டும். அதைப் பெற மனிதன் தன் திறமைகளைப் பூரணமாகத் தாண்டிவரவேண்டும். தாண்டிவர, அதுபோல முனைந்தால் அகந்தை அழியும். பூரணமான முயற்சியை நல்ல முறையில் மேற்கொள்ளவேண்டும். அப்படியானால் மனம் நேர்மையாகவும், உணர்வு முழுமையாகப் பயன்பட்டும், உடல் சிறப்பான முயற்சியையும் மேற்கொள்ளவேண்டும்.

***அது இடையறாத தெய்வ தரிசனத்தைக் கொடுக்கும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**ஆர்வம் அடக்கமுடியாமல் பீறிட்டெழுந்தால் அது தீவிரமாகி சத்தியஜீவிய அலையோசையாகிறது.**





## Tests of Nature, Spirit and hostile forces. Cheerfulness and fearlessness; confidence and self-giving; vigilence, humility.

- ✡ **ஆண்டவன் சோதனை செய்கிறார் என்கிறோம்.**
- ✡ **அன்னை சோதனை செய்வதில்லை என நான் மீண்டும் மீண்டும் கூறுவதுண்டு.**
- ✡ **இயற்கை சோதனை செய்யும்; ஆத்மா சோதனை செய்யும்; தீயசக்திகள் சோதனை செய்யும்என அன்னை கூறுகிறார்.**
- ✡ **சோதனை செய்வது என்றால் என்ன?**
- ✡ **பள்ளியில் பாடம் முடிந்தபின் படித்தது சரியாஎன சோதனை செய்ய பரீட்சை வருகிறது.**
- ✡ **மகன் வளரும்பொழுது, திருமணம் ஆனபின் தாயாருக்கு மகன் தம்மிடம் பிரியமாக இருக்கின்றானா என ஐயம் எழுவதுண்டு. ஐயம் எழுந்தால் அதைச் சோதனை செய்துபார்ப்பார்கள்.**
- ✡ **குழந்தைக்குத் தன்மீது தாயாருக்குப் பிரியம் போய்விட்டதா என்று தோன்றுவதில்லை. எவ்வளவு நாள் பிரிந்திருந்தாலும் தனக்குத் தாயார் வேண்டும்பொழுது குழந்தை தாயாரிடம் ஓடிவரும். 'அம்மாவுக்குப் பிரியம் இருக்குமா?'என்று கேள்வி எழுவதில்லை.**
- ✡ **இயற்கை என்பது வாழ்வு, ஆத்மா என்பது நம் பகுதி; தீயசக்திகள் ஒருவரிடம் தொடர்புகொண்டால் அவர்களைத் தம் பிடியில் வைத்துக் கொள்ளும். அதனால் தம் பிடியிலிருந்து போய்விட்டாராஎனச் சோதனை செய்யும். வாழ்வு இயற்கையின் பகுதி. வாழ்வுக்கு ஜீவன் உண்டு. அதுவும் நம்மை அதன் பிடியில் வைத்திருக்க முயலும்.**
- ✡ **தம் பிடியில் நம்மை வைத்திருப்பவர் நாம் பிடியுள்ளிருக்கிறோமா, இல்லையாஎனச் சோதனை செய்தபடியிருப்பார்.**

✡ ஆத்மா உயர்ந்ததென்றாலும், பகுதி என்பதால் தம் பிடியுள் நாம் இருக்கவேண்டும்என நினைக்கும் (possessive). அது பகுதியின் தன்மை.

✡ அன்னை முழுமையின் உறைவிடம். அவர் அடிப்படை பூரணச் சுதந்திரம். அவருடைய சுபாவத்தில் (possessive nature) தம் பிடியுள் வைத்திருக்கவேண்டும் என்பது இல்லை. அதனால் அன்னை சோதனை செய்வதில்லை.

✡ 'மனிதன் தம்மிடம் எதையும் எதிர்பார்க்கலாம் என்ற அன்னை தாம் மனிதனிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை' என்றார். இது முழுமையின் முத்திரை.

✡ பயமின்றி, குதூகலமாக இருப்பவர் வாழ்வின் - இயற்கையின் - சோதனையில் தேறுவார் என்கிறார் அன்னை. சந்தோஷமாக இருந்தால் பயம் போகும். பயமில்லை எனில் அடுத்தவர்க்குப் பிடியில்லை.

✡ தெம்புள்ளவர் கொடுப்பார்; எதிர்பார்க்கமாட்டார். எதிர்பார்க்காதவர் எவர் பிடியினுள்ளும் வரமாட்டார். ஆத்மாவின் பிடியுள்ளும் வரமாட்டார். Pride and Prejudiceஇல் எலிசபெத் டார்சியிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை. டார்சி அவள் பிரியத்தை எதிர்பார்க்கிறான். அதனால் எளிய எலிசபெத் அவன் பிடியுள் வரவில்லை. டார்சிதான் அவளை நினைத்து உருகுகிறான்.

✡ தீயசக்திகள் கடுமையானவை, கொடுமையானவை. மயிரிழை தவறினால் அவை ஆபத்து விளைவிக்கும்.

உஷாராக இருப்பவரிடம், அடக்கமாக இருப்பவரிடமும் தீயசக்திகள் தோற்கும்.

தர்மபுத்திரர் உஷாராக இல்லை. அதனால் சூதுக்குப் பலியானார்.

திரௌபதி அடக்கமாக இல்லை. துரியோதனனைக் கண்டு சிரிக்கிறாள். அவன் மாயமாளிகையில் தண்ணீரில் விழுந்தபொழுது 'குருடன் மகன் குருடன்' எனக் கூறிவிடுகிறாள். அடக்கமில்லாத பொழுது தீயசக்திகள் பலிவாங்கும்.

❀❀❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# நமக்கு அவ்வளவுதான்

நமக்கு நியாயம் கிடைக்காதபொழுது மேலிடத்தில் குறை சொன்னால் சில சமயங்களில் ஓரளவு நியாயம் கிடைக்கும். மெடிக்கல் சீட் நிலையாக எதிர்பார்த்து ஏமாந்தவனுக்கு பல் டாக்டர் BDS படிப்புக்கு இடம் கிடைக்கும். “நமக்கு அவ்வளவுதான்” என மனம் ஏற்கிறது. முதல் மார்க் வாங்கியவனுடைய பரிசை அடுத்தவனுக்குக் கொடுத்ததுடன் ஜாதி துவேஷத்தால் 81 என்ற மார்க்கை 18 என திருத்தி பெயிலாக்கியபின், நியாயம் தேடிப் போனவனுக்கு ஏராளமான சிரமங்களுக்குப்பின் பாஸ் போடுகிறார்கள். இது உலக நியாயம்.

The Life Divine, ‘முயற்சியை முடிவுவரை செய்வது அவசியம்; பாதியில் நிறுத்தக்கூடாது’ என்கிறது. பெயிலான மாணவன் தலைமை ஆசிரியருக்கு அப்பீல் செய்யலாம். தவறினால் DEOக்கு எழுதலாம். பலனில்லைஎனில் கோர்ட்டிற்குப் போகலாம். அங்கும் நியாயம் கிடைக்கவில்லைஎனில் ஜனாதிபதிக்கு எழுதலாம். எந்தக் கட்டத்திலும் நியாயம் கிடைக்கலாம்; கிடைக்காமற் போகலாம். G.O. சர்க்கார் ஆர்டரை மீறி அநியாயம் செய்தால் கவர்மெண்ட் ஆர்டர் நியாயம் வழங்கும். அது தவறினால் Rule சட்டம் நியாயம் தரும். அதுவும் தவறினால் Law சட்டம் நியாயம் தரும். அதுவும் தவறினால் Constitution அரசியல் நிர்ணய சட்டம் நியாயம் வழங்கும்.

✡ **நாமே பாதியில் முயற்சியை முடிக்காவிட்டால் முடிவுவரை முயற்சியைத் தொடர்ந்தால், பலன் நிச்சயம் உண்டு என்பது The Life Divine முதல் அத்தியாயத்தில் கூறுவது.**

மனம் நியாயத்தை நம்பி, அன்னைமீது நம்பிக்கை வைத்து, நம்மாலியன்ற அளவு முயற்சி செய்து, பிரார்த்தனையை மேற்கொண்டால்,

✡ **முடிவான சட்டம் தருவதை முதலிலேயே அன்னை தருவார்.**

✡ **''நமக்கு அவ்வளவுதான்'' என்பதை ''நமக்கு அன்னை இருக்கிறார். நம் மனத்தில் உண்மையிருக்கிறது. ஊரோ, உலகமோ, சட்டமோ, நியாயமோ முடிவில்லை. முடிவு அன்னை'' என மாற்றிக்கொள்ள பக்தர்கட்கு உரிமையுண்டு.**

❀❀❀

# ஆன்மாவின் பார்வை - அருட்பார்வை

துணி வாங்கப் போகும்பொழுது மளிகைக்கடை தேவையில்லை. நாம் குடும்பம் செய்யும்பொழுது சிறைச்சாலை தவறு. இன்று துணி வாங்கும் நமக்கு நாளை கடை சாமான் வேண்டும். இன்று வேண்டாத மளிகைக்கடை நாளை தேவைப்படும். நமக்குத் தவறாகத் தெரியும் சிறைச்சாலை அங்கு இல்லாவிட்டால், அங்கிருக்கவேண்டியவன் நம் வீட்டில் நுழைவான். நமக்கு சிறைச்சாலையும் தேவை. நமக்குக் குடும்பம் உயர்வு. சிறைச்சாலை தேவையென்றாலும் மட்டம்; தாழ்வு. மேலே வந்தவர்கள் எல்லாம் கீழே அனுபவப்பட்டு வந்தவர்களே. கீழே அனுபவப்படாமல் மேலே வந்தவனைக் கீழேயுள்ளவன் தொந்தரவு செய்வான். எனவே கீழும், மேலும் அவசியம். என்றாலும் மனம் மேலேயுள்ளது உயர்வு எனவும், கீழேயுள்ளது தாழ்வு எனவும் கூறும். பூலோகத்தைவிட சொர்க்கம் உயர்ந்தது. அதையும் கடந்து பூலோகச் சுவர்க்கம் உள்ளது.

✡ **பெரியது பகுதி; சிறியது பகுதி. பெரியதும், சிறியதும் சேர்ந்ததே முழுமை.**

✡ **பெரியது மேலேயுள்ளது. மேலேயுள்ள பெரியது கீழேயுள்ள சிறியதில் வந்து மலர்வது மக்கள் ஆட்சி. மக்கள் மன்னர் ஆகும் நிலை.**

✡ **பெரியவன் சிறியவனை நாடி, சிறியவனுள் பெரியவனைக் கண்டு, வெளிக்கொண்டுவர முயலும் காலம் இது. ஆத்மா வாழ்வில் இறங்கிவந்து, வாழ்வினுள் புதைந்துள்ள ஆத்மாவாக மலரச்செய்வது சத்தியம் ஜீவியம் பெறுவதாகும்.**

✡ **சர்க்கார் எளிய மக்களிடையே கல்விமூலம் வந்து, ஏழைகளின் மனத்தில் உள்ள ஆத்மா கல்வியாக மலர்ந்து, அது பட்டம், படிப்பு, அந்தஸ்தாக மாறி, டி.வி., வீடு, காராக மலர்வது மக்கள் ஆட்சியில் எல்லோரும் இந்நாட்டு மன்னராகும் கட்டம்.**

✡ **பிச்சைக்காரனில் பிரம்மம் தெரிவது பிரம்மஜனனமான பிரம்ம ஞானம்.**

✡ **அந்தப் பிச்சைக்காரன் 'நான்' என்று உணர்வது ஆத்மா தன்னை அறிவதாகும்.**

❀❀❀